★ விலை ரூபா 1-00

ஈழநாடு
THE EELANADU

(1958 — வெள்ளிவிழா ஆண்டு — 1983)

மலர் 25 ஆனி 30 - ஷவ்வா 3 இதழ் 153

யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 14—7—83

## விசாரணைக்குழு அமைக்குமாறு
## திருமலை மா. அ. சபை கோரிக்கை

(திருகோணமலை)

திருகோணமலையில் அண்மையில் நிகழ்ந்த வன்செயல்கள் தொடர்பாக விசாரணைக் குழுவொன்றை அரசாங்கம் நியமித்து முழுவிசாரணை நடத்தி, நஷ்டஈடு வழங்கவேண்டும்என்று கோரும் தீர்மானம், நேற்று நடைபெற்ற திருகோணமலை மாவட்ட அபிவிருத்தி சபைக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

இத்தீர்மானத்தை மாவட்ட அபிவிருத்திசபைத் தலைவர் திரு. அ. தங்கத்துரை பிரேரிக்க ஐ. தே. கட்சி உறுப்பினரும் சேருவல எம். பி. யுமான திரு. எச். பி. லீலரத்ன வழிமொழிந்தார்.

இத்தீர்மானம் ஏகமனதாக நிறைவேறியது.

நேற்று நடைபெற்ற மாவட்ட அபிவிருத்திசபைக் கூட்டத்துக்கு திருகோணமலை எம். பி. திரு. இரா. சம்பந்தன், மூதூர் எம். பி. திரு. எம். ஈ. எச். மஹ்ரூப் ஆகியோரும் சமுகமளித்திருந்தனர்.

அபிவிருத்தி சபைத் தலைவர் திரு. அ. தங்கத்துரை கூட்டத்தில் உரையாற்றுகையில்; அண்மையில் நிகழ்ந்த வன்செயல்கள் காரணமாக அபிவிருத்தி வேலைகள் அனைத்துமே ஸ்தம்பித்துவிட்டன என்றும் கடந்த இரண்டு மாதங்களாக அபிவிருத்திவேலைகள் எதுவுமே நடைபெறவில்லை என்றும் கூறினர்.

''அண்மையில் நிகழ்ந்த கல

(8-ம் பக்கம் பார்க்க)

# அரசு கூட்டும் வட்டமேசை

# மாநாடு: பயங்கரவாத ஒழிப்பு பற்றி விரிவாக ஆராயப்படும்

## 4 கட்சிகளுக்கு அழைப்பு

(கொழும்பு)

**பயங்கரவாத நடவடிக்கைகளை முற்றாக ஒழிப்பதுபற்றி ஆராய்ந்து முடிவு எடுக்க பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் அரசியல் கட்சிகளைக் கொண்ட வட்டமேசை மாநாட்டை கூட்டுவதென்று அமைச்சரவை நேற்று முடிவுசெய்துள்ளது.**

அமைச்சரவை கூட்டத்தை தொடர்ந்து, அமைச்சர் ஆனந்த டி அல்விஸ் பத்திரிகையாளர்களுக்குமேற்கண்ட தகவலை தெரிவித்தார்.

இம்மாநாடு தொடர்பான அழைப்பு, தமிழர் விடுதலைக் கூட்டணி, சிறிலங்கா சுதந்திரக்கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி, மக்கள் ஐக்கியமுன்னணி செயலாளர்களுக்கு நேற்று அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் பயங்கரவாத நடவடிக்கைகளை ஒழிப்பதற்கான வழிவகைகள் பற்றி இந்த வட்டமேசை மாநாட்டில் ஆராய்ந்து முடிவு எடுக்கப்படும். இம்மாநாட்டில் தயாரிக்கப்படும் திட்டங்கள் உடனடியாக அமுல்செய்யப்படும்.

[வட்டமேசை மகாநாட்டிற்கு பாராளுமன்றத்தில் மட்டும் அங்கம்வகிக்கும் கட்சிகளுக்கு மட்டுமன்றி, சகல அரசியல் கட்சிகளுக்கும், அழைப்பு அனுப்பப்பட்டுள்ளதாக முன்னர் கிடைத்த செய்தி தவறானதாகும்]

## செட்டிகுளம் ரயில் நிலையச்சம்பவம்:
## நான்கு இளைஞர் கைது!

(வவுனியா)

செட்டிகுளம் ரயில்நிலையத்தில் கடந்த வியாழக்கிழமை அதிகாலை இரண்டு மணிக்கு நடந்த சம்பவம் தொடர்பாக நேற்று நான்கு இளைஞர்கள் வவுனியா பொலிஸாரினுல் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

செட்டிகுளம் ரயில்நிலையத்துக்குள் நுழைந்து துப்பாக்கிமுனையில் தொலைபேசிகளை நொறுக்கி, 'டபிளட்' சமிக்ஞைக் கருவியை உடைத்து, பணத்தைக் கொள்ளையடித்ததோடு, வெளியே நின்ற பஸ்ஸைத் தீக்கிரையாக்கினுர்கள்.

இதுதொடர்பாக, செட்டிகுளத்தில் ஆர். அருளானந்தம், எஸ். சந்தியாபிள்ளை கே. ஞானப்பிரகாசம், எஸ். மகேந்திரன் ஆகிய நான்கு இளைஞர்களுமே கைதுசெய்யப்பட்டார்கள்,

## கரணவாய் மகாவித்தியாலய
## விஞ்ஞான கூடம் உடைத்து
## இரசாயனப் பொருட்கள் கொள்ளை!

(புலோலி)

கரணவாய் சோழங்கன் மகாவித்தியாலய விஞ்ஞான ஆய்வு கூடம் இரவு வேளையில்உடைக்கப்பட்டு அசிற் வகைகள், இரசாயனப் பொருட்கள்கொள்ளையடிக்கப்பட்டுள்ளன.

இவ்வித்தியாலய ஆய்வு கூடத்திற்குக் காவலாளிகள் இல்லையாம். இரவு வேளையில் இவ் வித்தியாலயத்திற்குள் புகுந்த கொள்ளையர்கள் விஞ்ஞான ஆய்வுகூடக் கதவை உடைத்து அங்கிருந்த அசிற் வகைகள், பௌதிகத் த்ராசுகள், இரசாயனப் பொருட்கள் என்பனவற்றைக்கொள்ளையடித்துள்ளனர்.

இக்கொள்ளைச் சம்பவம் தொடர்பாக வித்தியாலய அதிபர் பருத்தித்துறைப் பொலிசில் புகார் செய்துள்ளார்.

பொலிசார் இக்கொள்ளைச் சம்பவம் தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். இதுவரை எவரும் கைதுசெய்யப்படவில்லை.

## ஒருமணி நேரத்தில் ரூ. 60,000 வசூல்

(யாழ்ப்பாணம்)

திருகோணமலைத் தமிழர் புனர்வாழ்வுநிதிக்கு நேற்று யாழ் பஜாரில் ஒரு மணி நேரத்தில் அறுபதினுயிரம் ரூபா வசூலானது!

தமிழர் விடுதலைக்கூட்டணி செயலாளர்நாயகம் திரு. அ. அமிர்தலிங்கம் தலைமையில்சென்ற குழுவினரே மேற்படி நிதியை வசூலித்தனர். இக்குழுவில் யாழ்ப்பாணம் எம். பி. திரு. வெ. யோகேஸ்வரன், யாழ். மாநகர உறுப்பினர் திரு. தம்புகந்தையா வர்த்தகப் பிரமுகர் திரு. சின்னத்துரை ஆகியோர் அங்கம்வகித்தனர்.

# அரசு தனியார் அலுவலகங்கள் வேலைநேரம் குறைக்கப்பட்டது

(யாழ்ப்பாணம்)

வடபகுதியிலுள்ள அரசாங்க கூட்டுத்தாபன, தனியார்துறை அலுவலகங்களின் பகல்வேலைநேரம் குறைக்கப்பட்டுள்ளது.

வடபகுதிரயில்சேவை இடைநிறுத்தப்பட்டுள்ளதாலும், இ. போ. ச. பஸ்போக்குவரத்துச்சேவை பிற்பகல் 4 மணியுடன் இடைநிறுத்தப்பட்டுள்ளதாலும் ஊழியர்களின் பிரயாணவசதியை முன்னிட்டு வேலைநேரம் குறைக்கப்பட்டுள்ளது.

சில தனியார் அலுவலகங்களில் தங்கள் போக்குவரத்து வசதிக்கேற்ப கடமையை முடித்துவிட்டுச்செல்கிறுர்கள்.

• இ. போ. ச. பஸ்போக்குவரத்து வசதிக்கேற்ப யாழ். ஆஸ்பத்திரியிலும் நோயாளரைப் பார்வையிடும் மாலை நேரம் பிற்பகல் நான்கு மணியிலிருந்து ஐந்து மணியாக்கப்பட்டுள்ளது.

நேற்றும் வடபகுதியிலுள்ள எரிபொருள் விற்பனைநிலையங்களுக்கு முன்பாக நீண்ட கியூவில் தனியார் வாகனங்கள் நிற்கக் காணப்பட்டன.

யாழ். நகரிலுள்ள பாடசாலைகள் யாவும் நேற்றுப் பிற்பகல் 2-30 மணியுடன் முடிவடைந்தன. தொடர்ந்தும் பாடசாலைகள் நிலைமை சீராகும்வரை பிற்பகல் 2-30 மணியுடன் முடிவடையும் எனத் தெரியவருகிறது.

சில பாடசாலைகளில் வகுப்பு

(8-ம் பக்கம் பார்க்க)

உ

புதுக்கடைத் திறப்புவிழா
அழைப்பு

அன்புடையீர்,

நிகழும் ருதிரோற்காரி வருடம் ஆனி மாதம் 31ந் திகதி (15-7-83) வெள்ளிக்கிழமை முற்பகல் 9-30 மணிமுதல் 10 மணிவரை வரும் சுபமுகூர்த்த வேளையில்

எம்மால் புதிதாக அமைக்கப்பெற்ற

அலங்கார் நகைமாளிகை

என்னும் வர்த்தக நிலையத்தை ஆரம்பித்து நடாத்த நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்களும் சமுகந்தந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

தேவிபிளாசா கட்டிடம்
2 1/7, கஸ்தூரியார் வீதி
யாழ்ப்பாணம்

இங்ஙனம்
உரிமையாளர்கள்
(7968)

## ஆஸி. தூதுவர் மனைவி மரணம் தற்கொலை!

(கொழும்பு)

இலங்கையில் அவுஸ்திரேலியத் தூதுவராக இருந்த சார்ள்ஸ் கெவினின் மனைவியின் மரணம் தற்கொலை எனத் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது.

பறங்கியர் இனத்தைச் சேர்ந்த 54 வயதான தெரேசா கெவின் மர்மமான முறையில் மரணமாகியிருந்தார். இவர் ஒரு இலங்கைப் பிரஜை. கொழும்பு ஹவ்லொக் வீதியில் வசித்து வந்தார். கொழும்பு நகர மரணவிசாரணை அதிகாரி விசாரணையின் பின்னர் தற்கொலை எனத் தீர்ப்பளித்தார்.

1968-ம் ஆண்டில் இவரது கணவர் இறந்துவிட்டார்.

(இ)

## திருகோணமலையில்
## மாணவர் பகிஷ்கரிப்பு நீடிப்பு
## குருநகர் இளைஞர் கைது!

(திருகோணமலை)

திருகோணமலையில் நிலைமை வழமைக்குத் திரும்பியபோதிலும் ஊரடங்குச்சட்டம் தொடர்ந்து இரவு 8 மணி முதல் அதிகாலை 4 மணிவரை தொடர்ந்து அமுலில் இருந்

[8-ம் பக்கம் பார்க்க]

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

குடியிருக்க வசதியானதும், பாடசாலை, மின் வசதியுள்ளது மான 8 பரப்புக் காணி மட்டுவில் தெற்கில் நுணுவில் பருத்தித்துறை செல்லும் வீதிக்கு அண்மையில் விற்பனைக்கு உண்டு. விபரங்களுக்கு:- செ. குமாரசாமி (இளைப்பாறிய பொலிஸ்), மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி. 7929

Volkswagen, 1200, 12 V 9 ஸ்ரீ கார், ஒறிஜினல் நிலையில் (குறைந்த மைல் ஓடியது) விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: 230, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். போன்: 23252. (7955)

## தேவை

யாழ்ப்பாணம் ரோயல் டிஸ்பென்சறிக்கு நல்ல ஆங்கில கணித அறிவுள்ள பெண் உதவியாளர் உடன் தேவை. நேரில்வரவும். 7940

கைத்தறி நெசவு வாப்பு ஓட தெரிந்த பெண் பிள்ளை ஒருவர் தேவை. முன் அனுபவம் உள்ளவர்கள் நேரில் வரவும். சிவராம் ரெக்ஸ் புடவைகடை, புதுரோட் சந்தி, காரைநகர். 7945

யாழ்ப்பாணம், மானிப்பாய், சண்டிலிப்பாய், உடுவில், திருநெல்வேலி பகுதியில் வீடு கட்டக்கூடிய காணி தேவை. மூன்று பரப்பளவில் இருக்கவேண்டும். முழு விபரத்துடன் விண்ணப்பிக்கவும். விளம்பர இல. 7964, மே/பா ஈழநாடு, யாழ்ப்பாணம். (7964)

## கல்வி

மோட்டார் மெக்கானிசம் (வயின்டிங், மோட்டார் எலெற்றோனிக்ஸ் இலவசமாக கற்பிக்கப்படும்.) கிழமை நாட்களில் காலை வகுப்புக்கள். உடன் தொடர்பு கொள்க. நிர்வாகி, யாழ்ப்பாண கல்வி நிலையம், சாந்தி தியேட்டர் அருகாமை, யாழ்ப்பாணம். விரிவுரையாளர் S. C. இம்மானுவேல் B. sc. (Cey) Electrical and Automobile Engineer. 7949

City and Guilds inter-final Electrical Power Engineering only ஆரம்பம் 16-7-83. உடன் தொடர்பு கொள்க. நிர்வாகி, யாழ்ப்பாண கல்வி நிலையம், சாந்தி தியேட்டர் அருகாமை, யாழ்ப்பாணம். 7950

## சேவை

கல்வி நிறுவனங்களுக்கு திறமைமிகு விஞ்ஞான/கணித தமிழ் ஆசிரியர்கள் தேவை எனில் தொடர்பு கொள்ளவும். ஆசிரியர் சேவை, நாதன் மெடிக்கல், பிரதான வீதி, கரவெட்டி. (7962)

## வகுப்புகள்

Scientific Cutting Hair Styles, கேக் ஐசிங் ஆகியவற்றிற்கு செவ்வாய், வியாழன், சனி, ஞாயிறு ஆகிய நாட்களில் வகுப்புக்கள் நடைபெறுகின்றன. வகுப்பு நேரங்களில் தொடர்பு கொள்ளவும். The Ladies Academy இல. 27, மின்சார நிலைய வீதி, 3-வது ஒழுங்கை, யாழ்ப்பாணம். (7601)

## விற்பனைக்கு

பரந்தன் D, ஐந்தாம் வாய்க்கால் என்னுமிடத்தில் 7 ஏக்கர் நெற்காணி இரு போகம் செய்யக்கூடிய நீர்ப்பாசன வசதியுடன் விற்பனைக்குண்டு. தொடர்பு செ. அம்பிகை பாலன், சட்டத்தரணி, ஜே. பி. யூ. எம். 9, கண்டி வீதி, சாவகச்சேரி, தொலைபேசி: 262. 7963

## முதல் ஆண்டு நினைவு அஞ்சலி



அமரர்

**வல்லிபுரம் ஐயாத்துரை**

தோற்றம்: 10-8 - 1898
மறைவு: 26-6-1982

தங்கள் ஆன்மா என்றும் இறையடியில் இணைந்திருக்க இறைவனை இறைஞ்சுகின்றோம்.

மனைவி, மக்கள், மருமக்கள், பேரர்.

509 (323),
நாவலர் வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம். 7966

## பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி பரிசளிப்பு விழா நாளை 15ம் திகதி அதிபர் பொ. நாகரத்தினம் தலைமையில் நடைபெறும்.

பேராசிரியர் ப. சந்திரசேகரம் பரிசளிப்பு பேருரை நிகழ்த்துவர். திரு வ. பொன்னம்பலம் தாபகர் உரை நிகழ்த்துவார் திருமதி க. சந்திரசேகரம் பரிசில் வழங்குவார்.

(க)

## இன்று மகத்தான திறப்புவிழா

திருநெல்வேலி புதியசந்தை மேல்மாடி
14-ம் இலக்கத்தில் அமைந்துள்ள

**★ உமா ரூர்ஸ் அன் ட்ரவல்ஸ் ★**

14-7-1983 வியாழக்கிழமை காலை 9-43 மணிக்கு
பிரபல கட்டிட ஒப்பந்தகாரர்

**திரு. எஸ். தம்பிஐயா**

அவர்களால் ஆரம்பித்து வைக்கப்படும்.
அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

உரிமையாளர்.

(7889)

## பதவி வெற்றிடங்கள்

எமது ஆலையில் உள்ள கீழ் வரும் பதவிகளுக்கு பெண்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. மின்தறி இயக்குநர் — 12 வெற்றிடங்கள்
2. பதனிடுமாலை துணி மடிப்பாளர் — 5 வெற்றிடங்கள்

வயதெல்லை 1-7-83ல் 18ற்கும் 30ற்கும் இடையில்

**விண்ணப்ப முடிவு தேதி – 20-7-83**

பொதுமுகாமையாளர்,

**யாழ். மாவட்ட புடவை நெசவாளர் கூட்டுறவுச் சங்கம்,**

10/1, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.

(7956)

உ

## திருமண அழைப்பு

அன்புடையீர்,

நிகழும் ருதிரோற்காரி ஆண்டு ஆடி மாதம் 15-ந் திகதி (15-7-83) வெள்ளிக்கிழமை காலை 10-02 மணியளவில் வரும் சுபவேளையில்,

| எமது மகன் | எனது மகள் |
|---|---|
| **தங்கவேலாயுதம்** | **பத்மாதேவி** |
| அவர்களுக்கும் | அவர்களுக்கும் |

மணமகள் இல்லத்தில் திருமணம் செய்துவைக்கப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்களும் வருகை தந்து ஆசீர்வதிக்கும் வண்ணம் கேட்டுக் கொள்கிறோம்.

தங்கள் நல்வரவை நாடும்

திரு. திருமதி சிங்காரவடிவேலு,
நாகமுதலியார் வீதி,
பருத்தித்துறை.

சட்டத்தரணி
தி. நாகலிங்கமுதலி, ஜே. பி.
40, நீதிஸ்தல வீதி,
பருத்தித்துறை.

★ தனிப்பட்ட அழைப்புகள் இல்லை ★

(7965)

அரிய சந்தர்ப்பம் — தவறவிடாதீர்கள்

## ஆரம்பம் 15-7-83

பிரபல விரிவுரையாளர்களால் கற்பிக்கப்படுகின்றன.

1. ஹோட்டல் மனேஜ்மென்ற் அன் ரூறிசம் (HOTEL MANAGEMENT AND TOURISM) 3 மாதப் பயிற்சி
2. றேடியோ அன் ரெலிவிசன் ரெக்னோலொஜி 4 மாதப் பயிற்சி
3. TELEX OPERATORS 2 மாதப் பயிற்சி
4. எலக்றிகல் வயறிங் 2 மாதப் பயிற்சி
5. FRENCH/GERMAN-CONVERSATION/GRAMMER ஒரு மாதப் பயிற்சி

செய்முறைப் பயிற்சிகளுடன் வகுப்புகள் நடாத்தப்படும்.

**KEEN INSTITUTE**

மணியம்ஸ் கட்டடம்,
ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

முல்லைத்தீவு
மாவட்ட நீதிமன்றம்

மரணசாதனமின்றி மரணமெய்திய முல்லைத்தீவு, பிரதான வீதியைச் சேர்ந்த ஹாஜியார் அயினியாப் பிள்ளை சுல்தான் அப்துல் காதிறு என்பவரின் மரணச் சொத்து விடயமாக
— மரணமெய்தியவர்

முகமது சரீபு பெண் பாத்திம்மா நாச்சியா,
பிரதான வீதி,
முல்லைத்தீவு, — மனுதார்

மரணச்சொத்து
நியாயாதிக்கம் இல: 14

எதிராக

1. முகம்மது இப்றுகிம் செய்னுள் ஆப்தீன்,
2. அப்துல்கமீது பெண் செய்நம்பு நாச்சியா,
3. மீரா சாகிப் அல்லது சமூன்,
4. அப்துல் சமத் சதுறுதீன்,
5. சாகுல் கமீது மகள் உம்மா ஹபீபா,
6. சாகுல் கமீது மகள் றகீமா,
7. சாகுல் கமீது வஹாப்,
8. சாகுல் கமீது மஜீத்
9. சாகுல் ஹமீது ஹபீக்கா,
10. இப்றுகிம் சமூன்,
11. இப்றுகிம் ஜெனுனியா,
12. இப்றுகிம் பலீல்
13. இப்றுகீம் ஹைறூன்,
14. இப்றுகிம் சக்கா,
15. இப்றுகிம் இருஸத்,
16. இப்றுகிம் மஸனு எல்லோரும், பிரதான வீதி, முல்லைத்தீவு, தற்போது நீராவிப்பிட்டி, தண்ணியூற்று.

— எதிர்வாதிகள்

மேலேயுள்ளபெயர்கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிக்கப்பட்ட இறந்து போனவரின்மரணசாதனத்தை எண்பிப்பதற்காக / நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1983-ம் ஆண்டு தை மாதம் 7-ம் திகதி 9-00 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாதென்பதற்குத் தகுந்த காரணம் இருப்பின் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

1982-ம் ஆண்டுஐப்பசிமாதம் 14ஆம் நாளாகிய இன்று தேதியிடப்பட்டது.

நீதிமன்றக் கட்டளைப்படி
**சண்முகநாதன்,**
பதிவாளருக்காக

என்னுல் வரையப்பட்டது.
**வி. எஸ். நடராசா,**
மனுதாரின் சட்டத்தரணி

**7-1-83**
பின்னுறுதிக் கட்டளைக்கான காரணம் காட்டும் திகதி 10-2-83ம் திகதிக்கு நீடிக்கப்பட்டுள்ளது.
நீதிமன்றக் கட்டளைப்படி
**எஸ். கமலேஸ்வரன்,**
பதிவாளர்,

**10-2-83**
பின்னுறுதிக் கட்டளைக்கான காரணம் காட்டும் திகதி 10-3-83ம் திகதிக்கு நீடிக்கப்பட்டுள்ளது.
நீதிமன்றக் கட்டளைப்படி
**எஸ். கமலேஸ்வரன்,**
பதிவாளர்,

**10-3-83**
பின்னுறுதிக் கட்டளைக்கான காரணம் காட்டும் திகதி 28-4-83ந் திகதிக்கு நீடிக்கப்பட்டுள்ளது.
நீதிமன்றக் கட்டளைப்படி
**ஏ. ஸ்ரீஸ்கந்தராசா,**
பதிவாளர்,

**28-4-83**
பின்னுறுதிக் கட்டளைக்கான காரணம் காட்டும் திகதி 25-8-83-ம் திகதிக்கு நீடிக்கப்பட்டுள்ளது.
நீதிமன்றக் கட்டளைப்படி
**மு. ஸ்ரீபத்மநாதன்,**
பதிவாளர்,
7957

# போலந்தில் இராணுவ ஆட்சி விரைவில் நீக்கம்!

## அமெரிக்காவிடமிருந்து வர்த்தகத் தடை இழப்புகளுக்கு நட்டஈடு பெறப்போவதாகவும் தகவல்

வார்ஸோ, ஜூலை, 13

போலந்தின் இராணுவச் சட்டத்தினை முற்றுக நீக்குவதில் ஆட்சியாளர்கள் அக்கறை கொண்டுள்ளனர். விரைவில் இச்சட்டம் இங்கு நீக்கப்பட்டுவிடும். இத்தகவல்களை போலந்தின் அரசாங்கப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

அப்பேச்சாளர் இராணுவச் சட்டம் நீக்கப்படவிருப்பதாக அறிவித்துள்ளபோதிலும், எப்போது? எத்திகதியில்? அது நீக்கப்படுமென்பது குறித்து விபரங்கள் எதையும் வெளியிடவில்லை.

இராணுவச் சட்டத்தைப் பயனுள்ள ஒரு விதத்தில் நீக்குமாறு அரசாங்கத்திற்கு விடுக்கப்பட்டுள்ள விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன வென்றும் அவர் தெரிவித்தார்.

இராணுவச் சட்டம் போலந்தில் கொண்டுவரப்பட்டதிலிருந்து அமெரிக்கா போலந்துமீது வர்த்தகத் தடைகளை விதித்ததாகவும் இதனால் பல லட்சக் கணக்கான டாலர்களைப் போலந்து அரசாங்கம் இழந்ததாகவும் குறிப்பிட்ட அப்பேச்சாளர், இராணுவச் சட்டம் நீக்கப்பட்டதும் அவ்விழப்புகளுக்கான நட்டஈட்டுத்தொகையை அமெரிக்காவிடமிருந்து போலந்து பெறுமென்று கூறினர்.

போலந்தின் பொருளாதார, வர்த்தக நடவடிக்கைகளில் அமெரிக்காவும் குறிப்பிடத்தக்க பங்கினை வகிக்கின்றது. கடந்த மாதம் போலந்து வந்திருந்த பரிசுத்த பாப்பரசர் போலந்து அதிபர் ஜெனரல் ஜெருசெல்ஸ்கியைச் சந்தித்த போது, அமெரிக்காவின் உதவியுடன் போலந்து தனது கைத்தொழிற் துறைகளை வளம்படுத்தவேண்டுமெனத் தெரிவித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

1981ம் ஆண்டிலேயே போலந்தில் இராணுவச் சட்டம் அமுலுக்குக் கொண்டுவரப்பட்டது. கடந்த ஆண்டில் இச்சட்டம் ஓரளவு தளர்த்தப்பட்டபோதிலும் முற்றுக நீக்கப்படவில்லை. (கி)

## இந்திரா - றம்பால் சந்திப்பு

புதுடில்லி ஜூலை. 13

பொதுநலவமைப்பு நாடுகளின் செயலாளர் நாயகம் திரு. ஶ்ரீதத் றம்பால் இந்திய பிரதம மந்திரி திருமதி இந்திரா காந்தியைச் சந்தித்துச் சர்வதேச விவகாரங்கள், அணிசேரா நாடுகளின் பிரச்னைகள் ஆகியன தொடர்பாகக் கலந்துரையாடினர்.

திரு. றம்பால் இந்தியவெளிநாட்டமைச்சர் திரு. பி. வி. நரசிம்மராவ்வையும் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார். (வெ)

## நியூசிலாந்து அழகி உலக அழகுராணி!

லண்டன் ஜூலை 13

உலக அழகு ராணியாக நியூசிலாந்து நாட்டைச் சேர்ந்த பெண் தெரிவு செய்யப்பட்டுள்ளார். இவரின் வயது 19 என்று தெரிவிக்கப்பட்டது. இவ் உலக அழகுராணிப் போட்டி கனடாவில் நேற்று நடைபெற்றது. (கி)

## இஸ்ரேலுக்கு மீண்டும் அமெரிக்க இராணுவ உதவி!

லண்டன், ஜூலை, 13

ஆகாய மார்க்கமாக ஏவுகணைகளை இஸ்ரேலுக்கு வழங்க அமெரிக்கா முடிவுசெய்துள்ளது. இவ் ஏவுகணைகள் ரி. டி. 300 ரகத்தைச் சேர்ந்தவையாகும். இவற்றின் பெறுமதி 52 மில்லியன் டாலர்களாகும்.

லெபனானிலிருந்து தனது துருப்புக்களை வாபஸ்பெற்றுக் கொள்வதென இஸ்ரேல் அமெரிக்காவுக்குச் சம்மதமளித்ததைத் தொடர்ந்தே இவ் ஏவுகணைகளை வழங்க அமெரிக்கா முடிவுசெய்துள்ளது.

கடந்த ஆண்டு ஜூனில் லெபனானினுள் இஸ்ரேலியப் படைகள் புகுந்ததையடுத்து இஸ்ரேலுக்கான இராணுவ உதவிகளை அமெரிக்கா நிறுத்தியிருந்தது குறிப்பிடத்தக்கது.

அமெரிக்கா ஏவுகணைகளுடன் எப்-16 ரக போர் விமானங்களையும் இஸ்ரேலுக்கு வழங்கவுள்ளதென்று தெரிவிக்கப்பட்டது. (கி)

## இந்திய விமான நிலையங்களில் மின் அணுக் கருவிகள்!

சென்னை ஜூலை 13

விமானப்பயணிகளின்பொதிகளைச் சோதிக்கும் மின் அணுக் கருவிகள் இந்தியாவின் பிரதான விமான நிலையங்களில் பொருத்தப்படவுள்ளன.

இக்கருவிகள் பொதிகளினுள்ளும், பயணப் பைகளினுள்ளும் இருக்கும். உலோகப் பொருட்களின் தன்மையை 'எக்ஸ்ரே படமாக' வெளியே காட்டக்கூடியவை இதன்மூலம் பயங்கர ஆயுதங்கள் எடுத்துச் செல்லப்படுவதைத் தடுக்க முடியுமென்று தெரிவிக்கப்பட்டது.

இதுவரை பம்பாய், டில்லி, அமிர்தஸரஸ் ஆகிய விமான நிலையங்களிலேயே இக்கருவிகள் பொருத்தப்பட்டுள்ளன. எதிர்காலத்தில் இந்தியா முழுவதிலும் சுமார் 29 விமான நிலையங்களில் இக்கருவிகள்பொருத்தப்படவுள்ளன.

# நேபாள அரசு கவிழ்க்கப்பட்டது!

(காத்மண்டு)

நேபாள அரசாங்கம் நம்பிக்கையில்லாப் பிரேரணைமூலம் நேற்றுமுன்தினம் கவிழ்க்கப்பட்டது.

நேபாள பிரதம மந்திரி திரு. சூரியபகதூர் தாப்பாவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை நிறைவேறியதை அடுத்தே அரசாங்கம் கவிழ்க்கப்பட்டது. இந்த அரசு பதவியேற்று இரு ஆண்டுகளாகும்.

நேபாளத்தின் 14 அமைச்சர்கள் ராஜினுமாச்செய்ததையடுத்து, அரசில் நெருக்கடி நிலை உருவாகியிருந்தது தெரிந்ததே. நேபாளத்தின் புதிய பிரதம மந்திரி இன்று தேர்ந்தெடுக்கப்படவுள்ளார். (வெ)

# சாட் உள்நாட்டுப்போரில் 'நேட்டோ' தலையிடுகிறது!"

## சோவியத் யூனியன் குற்றச்சாட்டு!

மாஸ்கோ, ஜூலை, 13

ஆபிரிக்க நாடான 'சாட்டின் உள்நாட்டு விவகாரங்களில் நேட்டோ நாடுகள் பெருமளவு தலையிடுகின்றன' என்று சோவியத் யூனியன் குற்றஞ்சாட்டியுள்ளது.

சாட்டின், அரசாங்கப் படைகளுக்கும், அந்நாட்டின் முன்னுள் ஜனதிபதி தலைமையிலான புரட்சிப் படைகளுக்கும் இடையே பலத்த மோதல்கள் சில பிரதான நகரங்களில் இடம்பெற்றுவருகின்றன. இம் மோதல்களில் அரசாங்கப் படைகளுக்கு பிரான்ஸ் இராணுவ உதவிகளை வழங்கிவருகின்றதென்பது குறிப்பிடத்தக்கது.

எனவே இவ்வாறு 'சாட்டின்' உள்நாட்டுப் போரில் நேட்டோ நாடான பிரான்ஸ் தலையிடுவது குறித்தே மேற்கண்டவாறு சோவியத் தெரிவித்துள்ளது.

சோவியத் மேலும், 'சாட்டின் விவகாரங்களில் பிரான்ஸ் ஈடுபடுவதை நேட்டோவில் உள்ள ஏனைய மேற்கு நாடுகளும் ஆதரிக்கின்றனவென்றும், இதனால் சர்வதேச ரீதியில் இத் தலையீடு பெரும் பதட்டத்தை ஏற்படுத்துமென்றும்' தெரிவித்துள்ளது.

பிரான்ஸின் பெருமளவு இராணுவத் தளபாடங்கள் சாட் அரசாங்கப் படைகளுக்குக் கிடைத்துவருகின்றன. இத்துடன் மேலும் தமக்கு ஆயுத உதவி வழங்கும்படி சாட் பிரான்ஸைக் கேட்டுள்ளது.

சாட்டின் கிழக்கு நகரிலேயே கடும்சண்டை நிலவியது. ஏனெனில் இந்நகரைப் புரட்சிப் படைகள் கடந்த வாரம் கைப்பற்றியிருந்தன. தற்போது இந்நகர் மீண்டும் அரச படைகளின் கட்டுப்பாட்டின் கீழ் வந்துள்ளது. (கி)

# "எவ்வளவு பணம் கொடுத்தாலும் தென்னுபிரிக்கா போகப் போவதில்லை!"

## — காப்டன் லாயிட் அறிவிப்பு

லண்டன், ஜூலை, 13

''தென்னுபிரிக்கா எவ்வளவு பணம் கொடுத்தாலும் நாம் அங்கு போகப்போவதில்லை'' என்று மேற்கிந்திய கிரிக்கெட் அணித் தலைவர் கிளைவ்லாயிட், அந்த அணியின் பிரபல ஆட்டக்காரரான மைக்கேல் ஹோல்டிங் ஆகியோர் தெரிவித்துள்ளனர்.

இந்த இரு வீரர்களும் இங்கிலாந்தில் வழங்கிய பேட்டி ஒன்றிலேயே மேற்கண்ட தமது கருத்தை வெளியிட்டனர். காப்டன் கிளைவ்லாயிட் இப்பேட்டியில் மேலும் தெரிவித்ததாவது:-

''எம்மைத் தென்னுபிரிக்காவுக்கு வரவழைக்க சுமார் இரண்டரை லட்சம் அமெரிக்க டாலர்களை வழங்க தென்னுபிரிக்க அரசு முன்வந்தது. ஆனால் நாம் எவ்வளவு கூடுதல் பணம் வழங்கினுலும் அங்கு போகத் தயாராக இல்லை. தென்னுபிரிக்க அரசின் சில அநாகரிகமான இனவாதக் கொள்கைகள் எமக்கு அந்நாட்டின் மீது வெறுப்பை உண்டுபண்ணியுள்ளன'' என்றுர்.

சுமார் பத்து, பன்னிரெண்டு வருடங்களாகத் தென்னுபிரிக்க அரசாங்கம் தமக்குப் பணம் வழங்கி அங்கு வரவழைக்க முயன்று வந்ததாகவும் அவர் குறிப்பிட்டார்.

சில நாட்களுக்கு முன்னர் மேற்கிந்திய கிரிக்கெட் அணியைச் சேர்ந்த வீரர்கள் சிலர் தென்னுபிரிக்கா செல்ல முன்வந்துள்ளனர் என்ற வதந்தி மிகப் பலமாக அடிபட்டு வந்ததென்பது குறிப்பிடத்தக்கது. (கி)

# "உலக சமாதானம்மீது ரஷ்ய தலைவர்கள் தீவிர அக்கறை!"

## — ராஜீவ் காந்தி

மாஸ்கோ, ஜூ 13

''உலக சமாதானம் குறித்து சோவியத் தலைவர்கள் கொண்டுள்ள தீவிர அக்கறை என்னை மிகவும் கவர்ந்துள்ளது.'' என்று இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தியின் புதல்வரும், அகில இந்திய இளைஞர் இந்திரா காங்கிரஸ் செயலாளருமான திரு. ராஜீவ் காந்தி தெரிவித்தார்.

திரு. ராஜீவ் காந்தி சோவியத்தில் விஜயம் மேற்கொண்டுள்ளார். இவர் அங்கு பல்வேறு அரசியல், தொழில்துறை நிபுணர்களைச் சந்தித்து வருகிறுர். திரு. காந்தி மேலும் தெரிவிக்கையில், சோவியத் வெளிவிவசார அமைச்சர் திரு. அந்ரே குரொமிக்கோ உட்பட சோவியத் உயர் அரசியல்வாதிகளை தாம் சந்தித்ததாகவும், அவர்கள் உலக சமாதானத்தையிட்டு கொண்டுள்ள கருத்துக்கள், அதுகுறித்து அவர்கள் காட்டும் அக்கறை என்பன தன்னை வெகுவாகக் கவர்ந்துள்ளன. வென்றும் கூறினர்.

திரு. ராஜீவ் காந்தி தொடர்ந்து தெரிவிக்கையில், உலக அரசுகள் ஒருமித்து ஆயுதகட்டுப்பாட்டை மேற்கொள்ள வேண்டுமென்றும், குறிப்பாக புதிய ஆயுதங்களை உற்பத்தி செய்வதை நிறுத்த வேண்டுமென்றும் குறிப்பிட்டார். (கி)

# "தென்மராட்சி மேற்கு ப.நோ.கூ.சங்கநட்டம் குறித்து நடவடிக்கை வேண்டும்"

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சி மேற்கு ப. நோ. கூ. சங்கத்தின் ஊழியர்கள் நிருவாகத்தால் பழிவாங்குதல் நடவடிக்கைகளாலும் பிழையான இடமாற்றங்களாலும் மேலதிகஊழியர்களை வேலைக்கு வைத்ததாலும் சென்றவருடம் ரூபா 84000க்கு மேல் சங்கம் நட்டமடைந்தது. ஊழியர்களில் நிருவாகத்திற்கு சாதகமானவர்களுக்கு ஒரு மாதிரியும் மற்றவர்களுக்கு ஒரு மாதிரியும் பாரபட்சம் காட்டி நடத்துவதால் சங்கம் தொடர்ந்து பெரும் நஷ்டமடைந்திருக்கிறது. இதனையிட்டு உடன் விசாரணை செய்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென சாவகச்சேரி எம். பி. யையும் உணவு கூட்டுறவுத்துறை அமைச்சரையும் ஜனதிபதியையும் கேட்டுக் கொள்வதென்ற தீர்மானம் ஏகமனதாக கைதடி வடக்கு கிராம அபிவிருத்திச் சங்கக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

கைதடி நவபுரம் மாதிரி வீடமைப்புத்திட்டத்தில் பங்கு கொண்டவர்களுக்கு அமைக்கப்பட்ட சங்கத்தின் நடைமுறைகளையும் சங்கத்தால் சேகரிக்கப்பட்ட நிதியின் கணக்குகளையும் தென்மராட்சி உதவி அரசாங்க அதிபர் பரிசீலனை செய்து காணிகிடைத்த முழு அங்கத்தவர்களையும் அழைத்து முழுவிபரங்களையும் அவர்களுக்கு அறிவிக்குமாறு கேட்டுக்கொள்ளும் தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது.

கைதடிக் கிராமத்தில் பத்தாயிரத்துக்குக்கு மேற்பட்ட மக்கள் வசிக்கிறுர்கள் அவர்களின் நன்மைகருதி கைதடிப் பகுதிக்கு ஒருவிவாக பிறப்பு இறப்பு பதிவாளரை நியமித்துத்தருமாறு சாவகச்சேரி எம். பியை கேட்பதென்றும் சங்கம் தீர்மானம் எடுத்தது.

## லொறிச் சாரதி தாக்கப்பட்டார்

(யாழ்ப்பாணம்)

கொடிகாமம் பஸ் நிலையத்தில் நேற்றுக்காலை ஆயுதப் படையினரால் லொறிச்சாரதி ஒருவர் தாக்கப்பட்டதுடன் லொறியும் சேதப்படுத்தப்பட்டது.

கொழும்பு தொழிற்சாலையொன்றுக்கு, சொந்தமான இந்தலொறி பஸ்நிலையத்தில் நின்றபோது ட்ரக் கில் வந்து ஆயுதப்படையினர்சாரதியைத் தாக்கினர்கள்.

பின்னர் லொறியின் முன் கண்ணுடிகள் அடித்து நொறுக்கப்பட்டன. பின்பக்கத்திலுள்ள சிக்னல் கண்ணுடிகளும் அடித்து உடைக்கப்பட்டன.

ஆயுதப்படையினர் தாக்க ஆரம்பித்ததும் பஸ் நிலையத்திலிருந்த பிரயாணிகள் நாலா பக்கங்களும் சிதறி ஓடினர்கள்.

ஆயுதப்படையினர் சென்ற பின்னர் லொறிச்சாரதி ஆஸ்பத்திரிக்கு எடுத்து செல்லப்பட்டார்.

மணிவாக்கு

தன்னைத்தான் காதலனாயின் எனைத் தொன்றுந்
துன்னற்கதீவினைப் பால்.

— குறள்

# நமது நோக்கு

## பொலிஸ் மா அதிபரின் விண்ணப்பம்

கட்டுப்பாடற்ற, ஒழுங்கையும் சட்டத்தையும் உதாசீனஞ் செய்கின்ற போக்கை நாடெங்கிலும் நாம்இன்று காண்கின்றோம். குறிப்பாக பொதுஜனவாக்கெடுப்புக்குப் பின் அதிகரித்துவரும் அபாய நிலை இது.

இந்தச் சூழ்நிலையில் வடக்கிலும், கிழக்கிலும் வன்செயல்களும் சாதாரணமானவையென்று நாம் கருதவில்லை.

கடந்த சில தினங்களாக அடுத்தடுத்து நடைபெறும் அழிவுச்செயல்கள் இப்பகுதி மக்களின் தினசரி வாழ்வை சீர்குலைத்து வருகிறது.

அரசசொத்து, அரசாங்க வாகனங்கள், இ. போ. ச. பஸ்கள், லொறிகள், ஜீப்புகள் பல எரிக்கப்பட்டன.

அதைத் தொடர்ந்து, அரசாங்க அலுவலகங்கள், உபதபாற்கந்தோர்கள் போன்ற ஏழைகளுக்கு உதவும் அத்தியாவசியமான சாதனங்கள் தாக்கப்பட்டுள்ளன.

யாழ். அரச அதிபர் இதுபற்றி ஒரு விரிவான, விளக்கமான அறிக்கை சமர்ப்பித்திருப்பதோடு இவற்றின் விளைவுகள் இப்பகுதி மக்களை எவ்வளவுதூரம் பாதிக்கின்றன என்பதைத்தெளிவுபடுத்தி இருக்கின்றார்.

அரசாங்க சொத்துமக்கள் சொத்து; எங்கள் சொத்து. வடபகுதிக்கு றெயில் சேவையை மீண்டும் ஆரம்பிக்க வேண்டுமென்று மக்கள் கேட்கின்றனர்; அந்த உரிமை அவர்களுக்குண்டு. போக்குவரத்து அமைச்சர் அதற்குரிய பெட்டிகள் தற்சமயம் போதியனவில்லை என்கிறார்; அது நொண்டிச் சாட்டாயிருந்தாலும்றெயில் எரிப்பு அதற்கு வலிமை அளிக்கிறது.

[illegible] சேவையும் அவ்வாறே. மக்களின் அதிகரிக்கும் தொல்லைகள் ஒருபுறமிருக்க, எங்கள் சொத்தை, எந்தச் சொத்தையும் எரிப்பது அழிப்பது எவ்வகையிலும் தர்மமான செயல் அல்ல.

இத்தகைய வன்முறைச் சம்பவங்கள் அரசுக்கெதிரான உணர்ச்சியை வெளிப்பாடாக்கும் செயல்கள் என்பது ஒருவித கருத்து; அவை தொடருமாயின் நாடு கெடுவதோடு இவற்றைப் புரிபவர்கள், இவற்றைத் தடுக்க முடியாத பொதுஜன அபிப்பிராயம், இவற்றைக் கட்டுப்படுத்த இயலாத அரசு— இவையெல்லாம் நாட்டின் எதிர்காலத்தை அடகுவைக்கும் போர்வழிகள்.

எனவே, பொலிஸ் மா அதிபரின் விண்ணப்பம் மிக அவசியமானதென்பதில் இருவித அபிப்பிராயம் இருக்க முடியாது.

அண்மையில் இடம்பெற்றுவந்த சில்லறைச் செயல்கள், அரசால் கைது செய்யப்பட்ட தமிழ் ஈழ விடுதலை அணியின் தலைவர் டாக்டர் தர்மலிங்கம் அவர்கள், செயலாளர் திரு. கோவை மகேசன் அவர்கள் உடனடியாக விடுதலைசெய்யப்படவேண்டுமென்ற கோரிக்கையின் அறிகுறிகளெனப் பேசப்படுகின்றது.

இவ்விரு பிரமுகர்களின் சிறைவாசம், மனிதாபிமான அடிப்படையிலே மிக அநீதியானது. அதுமட்டுமல்ல; அமைதியான ஒரு ஹர்த்தாலில் நம்பிக்கை கொண்ட 'சாதுக்கள்' இவர்கள். எனவே, அவர்களின் விடுதலை கோரி வன்முறைச் சம்பவங்கள் நடைபெறுவது பொருத்தமற்றது. அவர்களின் அடிப்படைக் கோட்பாட்டுக்கு அந்நியமானது.

வடக்கிலும், கிழக்கிலும் வாழும் மக்களின் அடிமை நிலை ஆட்சியின் பிடிவாதக் கொள்கைகளால் தினசரி மோசமாகின்றது. வடபகுதியின் நிலைமை ராணுவ ஆட்சியின் தயவில் தங்கியி[illegible]கின்றது.

துன்பத்தின் உச்சியிலிருக்கும்போதும் நாம் நம்பிக்கை இழக்கவில்லை! எமது வருங்காலத்தை இளைஞர்களின் துப்பாக்கியால் நிர்ணயிக்கும்திட்டம் நாட்டுக்கோ எமது சமுகத்துக்கோ நல்லதில்லை. வன்செயலை நிறுத்துங்கள்என்று நாம் பகிரங்க புத்திமதி என்றும் வழங்கி வருகின்றோம்.

35 வருடங்களாக சுதந்திரம் இழந்து வாழும் ஒரு தேசிய இனம், தனது உரிமையின் வலிமையை உலகுக்கெடுத்துரைத்த, அரசைச் சிந்திக்கவைத்த பெருஞ்சாதனைகள் இளைஞர் சமுகத்தைச் சார்ந்ததே! இதனை மறுப்பவர் இங்கு நடப்பதென்ன என்பதை அறியாதவர்.

இலங்கை வானொலியும் அந்தக் கம்பனியினை சேர்ந்த அரசு 'வால் பிடிகள்', கனேடா தேசத்தின் பிரதிப் பிரதமர் போன்ற பெரும் அரச விருந்தினர் இலங்கையில் எவ்வித சிறுபான்மைப் பிரச்னையும் கிடையாது, ஜனநாயகம் உயிரோடிருப்பதோடு துள்ளிப்பாய்கிறதுஎன்று சொல்வதன் காரணம் என்ன என்று கேட்பதில் எவரும் காலம்போக்கார்.

'சப்பாத்து காலை வெட்டுவதை அதனை அணிபவனே உணர்வான்;' இதுதான் ஜனநாய அடிப்படைக் கோட்பாடு.

எனவே இந்த அடிப்படைப் பிரச்னை தீர்வு காணப்படாது இழுபறிப் படும்போது, ஒருசிறு அணை கட்டுவது பாயும் ஆற்றுக்கு ஈடுகொடுக்குமா?

அது எவ்வாறாயினும், யாழ் மக்கள் ராணுவ ஆட்சிக்குள் அகப்பட்டால் 1915ல் சேர் பொன்னம்பலம் இராமநாதன் சிங்கள மக்களுக்கு கைகொடுத்தது போல், ஒரு சிங்களப் பெருமகன் எங்களுக்குதவ வரமாட்டாரா?

### கந்தபுராண விரிவுரை

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் சூராவத்தை அருள்மிகு ஸ்ரீமுத்துமாரி அம்மன் ஆலய வருடாந்த மகோற்சவம் இன்று வியாழக்கிழமை ஆரம்பமாகி பதினெரு நாட்கள் நடைபெறும். தினமும் இரவு பிரம்மஸ்ரீ சிவ. வை. நித்தியானந்தசர்மா கந்தபுராணவிரிவுரை நிகழ்த்துவார். (ப)

# தமிழீழத்தை தென்னிலங்கை மக்களும் ஏற்கவேண்டும்"

## 'அடங்காத் தமிழன்' சுந்தர் கூறுகிறார்

(வவனியா நிருபர்)

''தமிழ்ஈழக் கொள்கையை தென்னிலங்கை மக்களும் ஏற்றுக்கொள்ளவேண்டும். இல்லாவிட்டால் இந்த நாட்டில் சமதானம் நிலவாது'' என்று முன்னாள் வவனியா எம்.பியான 'அடங்கா தமிழன்' திரு. ஸி. சுந்தரலிங்கம் என்னிடம் தெரிவித்தார்.

வவனியா கண்டி வீதியிலிருக்கும் இவரது சொந்த இல்லத்தில் தற்போது தங்கியிருக்கின்றார்.

சுகவீனமுற்றுள்ள திரு. சுந்தரலிங்கத்துக்கு தற்போது வயது 87.

''தமிழ் ஈழத்தின் எல்லையான வவனியாவிலேயே எனது உயிர்போன பிறகு உடல் தகனம் செய்யப்படுவதை விரும்புகிறேன்'' என்றும் தெரிவித்தார்.

வவனியாவிலுள்ள சொந்த இல்லவளவிலேயே உடல் தகனம் செய்யப்படுவதை விரும்புகிறேன்'' என்று கூறினார்.

தமிழ் இளைஞர்களுடைய தியாக உணர்வையும், வீரத்தையும் தான்மதிப்பதாகவும் அவர்களுடைய முயற்சி நிச்சயம் வெற்றியளிக்கும் என்ற நம்பிக்கை தனக்குண்டு எனவும் கூறினார்.

''தமிழ் மக்களுக்கு தமிழ் ஈழம் இலங்கையில் அமையத்தான் போகின்றது; அதனை எவராலும் தடுத்து நிறுத்த முடியாது; அது கடவுள் நியதி'' எனவும் தெரிவித்தார்.

## டாக்டர், கோவை கைதுக்கு கம்யூனிஸ்ட்(யாழ்.)கண்டனம்

(யாழ்ப்பாணம்)

தமிழீழ விடுதலை அணியின் தலைவர் டாக்டர் எஸ். ஏ. தர்மலிங்கம், செயலாளர் கோவை மகேசன் ஆகியோர் கைது செய்யப்பட்டமை குறித்தும், 'சற்றடேறிவியூ', சுதந்திரன் பத்திரிகைகளுக்கு சீல் வைக்கப்பட்டது குறித்தும் கண்டித்து இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி யாழ். மாவட்டக்குழு அறிக்கை ஒன்றை விடுத்துள்ளது.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

யாழ்தேவி எரிக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக இடதுசாரிக் கட்சிப் பிரமுகர்களான தோழர்கள் விஜயானந்தன், அண்ணாமலை, செந்திவேல் ஆகியோரைக் கைது செய்து விசாரணைக்குட்படுத்தியமை இடதுசாரிகள் மேல்அபாண்டங்களைச் சுமத்தும் பாலிஸ மனபோக்கையும் பிரதிபலிக்கின்றது.

''யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற ஹர்த்தால் திருகோணமலையில் நடந்த வன்செயல்களின் எதிரொளி என்பதை ஆட்சியாளர் உணரவேண்டும். மக்கள் ஜனநாயக விரோத செயல்களுக்கு எதிராக நடத்தும் இயக்கங்களில் ஹர்த்தாலும் ஒன்றே. இலங்கையிலுள்ள கட்சிகள் (யூ. என்.பி) உட்பட வெவ்வேறு காலங்களில்தமது எதிர்ப்புக்களை ஹர்த்தால்கள், சத்தியாக்கிரகங்கள் மூலம் தெரிவித்துள்ளன. அச்சந்தர்ப்பங்களில் மக்கள் வன்செயல்களில் ஈடுபட்டுள்ளனர் என்பதும் தெரிந்ததே. ஆனல் அவ்வேளைகளில் எல்லாம் அரசாங்கங்கள் மக்கள் முன்வைத்துப் போராடிய கோரிக்கைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து தீர்வுகாண முயன்றன, ஆனல் இன்றைய அரசு அவ்வாறு தீர்வுகாண முன்வராமல் சம்பந்தப்பட்ட மக்களை பழிவாங்கும் நோக்குடன் திட்

(5-ம் பக்கம் பார்க்க)

# இம்மாதம் 20-ல் சர்வகட்சி மாநாடு

(கொழும்பு)

பயங்கரவாதிகள் பிரச்னை தொடர்பாக விவாததித்து முடிவு எடுப்பதற்காக ஜனதிபதி ஜே. ஆர். ஜெயவர்தன இம்மாதம் 20ம் தேதி வட்டமேசைமாநாடொன்றை கூட்டுகிறார்.

இம்மாநாட்டிற்கு பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும், அரசியல்கட்சிகளுக்கு மட்டுமன்றி சகல அரசியல்கட்சிகளுக்கும், ஜனதிபதி செயலகத்திலிருந்துஅழைப்பு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

வட்டமேசை மநாட்டில் கலந்துகொள்வதுபற்றிதிருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா கட்சி உறுப்பினர்களுடன் ஆலோசனைசெய்வார் என சுதந்திரக்கட்சி பிரமுகர் ஒருவர் தெரிவித்தார்.

வட்டமேசை மாநாடு எதற்காக கூட்டப்படுகிறதென்பதற்குச்சரியான விளக்கம்அளிக்கப்படவில்லையென்றும் இம்மகாநாடுபற்றி இதுவரை கூட்டணிக்கு தெரிவிக்கப்படவில்லையென்றும் தமிழர் விடுதலைக் கூட்டணி வட்டாரங்கள் தெரிவித்தன.

இம்மாநாடு பற்றி அறிவிக்கப்பட்டபின் கூட்டணி பாராளுமன்ற குழுவினர் கூடி முடிவுசெய்வார்கள் என்றும் அந்தவட்டாரங்கள் தெரிவித்தன.

பயங்கரவாதத்தை ஒழிப்பதற்குக் கூட்டப்படும் மாநாடாக இருந்தால் தான் கலந்து கொள்ளப்போவதில்லையென்றும் ஆயுதப்படையினரின் பயங்கரவாதத்தை ஒழிப்பதற்கான மாநாடாக இருந்தால் கலந்து கொள்ள விரும்புவதாகவும், தமிழ்க் காங்கிரஸ் பொதுச் செயலாளர் திரு. குமார்பொன்னம்பலம், தெரிவித்துள்ளதாக கொழும்பிலிருந்து வெளிவரும் ஆங்கில தினசரியில் வெளிவந்துள்ளது.

1977ல் வட்டமேசை மகாநாட்டை கூட்டுவதாக ஐ.தே.க.வாக்குறுதியளித்திருந்ததாகவும், நிலைமைகட்டுக்குமீறிப் போனபின் இன்று மாநாட்டை கூட்டுவதாகவும் எப்படியிருந்தபோதும், இன்னும் காலம் கடந்துவிடவில்லை யென்றும், கம்யூனிஸ்கட்சி, மாநாடு கூட்டும் முயற்சியை ஆதரிப்பதாகவும், திரு. [illegible] தெரிவித்துள்ளார்.

சர்வகட்சிகளை கொண்ட வட்டமேசைமாநாடுயோசனை, 1977ல் ஐ. தே. கட்சி தேர்தல் விஞ்ஞாபனத்தில் கூறப்பட்டிருந்ததாகவும் தேசிய ஒற்றுமைக்கு பயமுறுத்தல் ஏற்பட்டுள்ள இந்த நேரத்தில் இது வரவேற்கத்தக்கதென்று திரு. பிரின்ஸ் குணசேகரா தெரிவித்தார். (க)

## குடியேறிய குடும்பங்களை வெளியேற்ற எடுக்கும் நடவடிக்கைக்கு வவனியா 'சிவா' ஆட்சேபம்!

(வவனியா)

இனக்கலவரத்தினல் பாதிக்கப்பட்டு மலையகத்திலிருந்து வவனியாவில் வந்துகுடியேறிய 260 குடும்பங்களை வெளியேற்ற வனபரிபாலன அதிகாரிகள் எடுக்கும் முயற்சிக்கு வவனியா எம்.பி திரு தா.சிவசிதம்பரம் ஆட்சேபனை தெரிவித்துள்ளார்.

வவனியாவிலுள்ள பாரதிபுரத்தில் 1 0 குடும்பங்களையும் சிவபுரம் என்ற இடத்திலுள்ள 110 குடும்பங்களையும் வெளியேறும்படி உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

1977ம் ஆண்டுஇனக்கலவரத்தினல்பாதிக்கப்பட்டுவவனியா வந்தவர்கள் காடுகளை வெட்டி அங்கு குடியேறினர்கள்.

குடிசைகள் அமைத்து தமது வாழ்க்கையை நடத்தி வரும் குறித்த 260 குடும்பங்களையும் உடன் வெளியேறும்படி வனபரிபாலன அதிகாரிகள் பணித்ததைத் தொடர்ந்து இவர்கள் விடயத்தினை வவனியா எம்.பி திரு சிவசிதம்பரத்திடம் முறையிட்டனர்.

பாரதிபுரம், சிவபுரம் 260 குடும்பங்களும் இனக்கலவரத்தினல் பாதிக்கப்பட்டு பின் அங்கு குடியேறியுள்ளனர்.

இவர்களை வெளியேற்ற எடுக்கும் நடவடிக்கைக்கு எம். பி கடும் ஆட்சேபனை தெரிவித்துள்ளார்.

அமைச்சர் திரு எஸ். தொண்டமான் உட்பட பல அரசாங்க உயர் மட்ட அதிகாரிகளுக்குஇதுதொடர்பானதனது ஆட்சேபனைக் கடிதங்களை வவனியா எம்.பி அனுப்பிவைத்துள்ளார்.

## மாவைக் கந்தன் ஆலய உற்சவம் நாளை ஆரம்பம்

(மாவிட்டபுரம்)

சரித்திரப் பிரசித்திவாய்ந்த மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில் வருடாந்த உற்சவம் நாளை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

பழமையும், வரலாற்றுப் பெருமையும் மிக்க மேற்படி ஆலயத்தில் தொடர்ந்து 25 தினங்கள் உற்சவம் இடம்பெற உள்ளது.

உற்சவத்தையொட்டி மேற்படி ஆலய சுற்றுடல் அமைதிப் பிரதேசம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

உற்சவத்தை சிறப்பாகவும், அமைதியாகவும், முறைப்படியும் நடத்த சகல ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக ஆலய ஆதீனகர்த்தா மகாராஜஸ்ரீ சு. து. ஷண்முகநாதக்குருக்கள் தெரிவித்தார்.

மேற்படி ஆலய ஒழுங்குகள் குறித்து ஆராய வலிவடக்கு உதவி அரசாங்க அதிபர் அலுவலகத்தில் ஆலோசனைக்கூட்டமொன்றும் நடத்தப்பட்டது.

பக்தர்களது போக்குவரத்து சுகாதார, பாதுகாப்பு வசதிகளை ஏற்படுத்திக்கொடுக்கும் வழிவகைகள் பற்றி இக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

## ✯ நூல் அறிமுகம்

# மனித உணர்ச்சிகளை பக்குவமாக அணுகியிருக்கிறார்!




ஆசிரியர்: **சுதாராஜ்**

வெளியீடு: **சிரித்திரன் பிரசுரம்**

550, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

விலை: ரூ. 14.00

பல்வேறு பட்ட மனித மனங்களின் உணர்ச்சிகளை மிகப் பக்குவமாக அணுகிப் படிப்பவர் இதயங்களோடு பகிர்ந்து கொண்டிருக்கிறார் எழுத்தாளர் சுதாராஜ்!

அலுப்போ சலிப்போஇல்லாமல், ஒரே மூச்சில் அத்தனை கதைகளையும் படித்துவிட வேண்டுமென்ற ஆவலைத் தூண்டி அவர் எழுத்துக்களோடு எம்மைச்சங்கமாக்கி விடுகிறது, அவரது 'கொடுத்தல்' என்ற சிறுகதைத் தொகுதி!

'சிரித்திரன்' சுந்தர் இலேசுப்பட்ட ஆளல்ல; இனம் கண்டு தான் பொறுப்போடு காரியத்தில் இறங்குவார். சுதாராஜின் படைப்பாற்றலில் உள்ள நம்பிக்கையால், 'சிரித்திரன் பிரசுர'மாக அவரின் இந்தக்கதைகளை வெளியிட்டார். அது வீண்போகவில்லை. தனதுஎழுத்துக்களால் 'சுதா' அவருக்குப் பெருமையைத் தேடிக்கொடுத்து விட்டார்!

பன்னிரண்டு சிறுகதைகள் அடங்கிய இத்தொகுதியில் இடம்பெற்றுள்ள ஒவ்வொரு கதையும் அன்றாடவாழ்வில், பலர் சந்திக்கின்ற பிரச்னைகளை மையமாகக்கொண்டு எழுதப் பட்டவை,

'கொடுத்தல்' என்ற முதல் கதையின் கடைசிக்கட்டம்:

''என்னஆறுமுகம்...நிலைமை விளங்காத மாதிரிக்கதைக்கிருய்?... நூறுரூபாய்க்கு.. இப்ப நினைச்சவுடனே எங்கேபோறது...? நீ வந்து நின்றகோலத்தைப்பாத்திட்டுத்தான்... என்னென்று சொல்லுறதெண்டு தெரியாமல் ரீயைக்குடிச்சிட்டு வா எண்டனுன்...''

அவர் ஆளாக்கிவிட்டபழைய முத்துராசாவா பேசுகிறுன்? 'இவனிட்டை போய்த் தேத்தண்ணியை வேண்டிக்குடிச்சனே' என்ற தாழ்வு உணர்வு மனதை அழுத்தியபோது, மனைவி கொடுத்துவிட்ட ஒரு ரூபாய் நினைவில் வந்து தலையை நிமித்தியது!

''இந்த... தேத்தண்ணிக் காசை எடு!'' என்று காசைக் கொடுத்தார். காலையில் இரக்கத்தோடு வழிஅனுப்பிவைத்த அந்தப்புண்ணியவதியின்தோற்றம் - அவளது துணை நெஞ்சிற் தைரியத்தைக் கொடுத்தது.

அந்த வரிகளுக்குள் நமது இதயம் பின்னிப்பிணைந்து, ஒரு விஞடி ஆறுமுகத்தின் மானரோஷத்துக்குத் தலை வணங்கிவிடுகிற சக்தியை 'சுதா'வின் எழுத்துக்கள் ஏற்படுத்திவிடுகின்றன.

### தன்மானஉணர்வு

'சுவைத்தேன்' என்ற தனது முன்னுரையில் சுந்தர் இந்தக் கதையைப் பற்றிக் குறிப்பிட்டுள்ள காத்திரமான வரிகளை மீண்டும்மொருமுறை இரை மீட்டுக்சொல்கிறேன்:

''கொடுத்தல்' என்ற கதை தன்மானம் தணலாய்க்காய்கின்றது. பெற்ருேல் விலை ஏற்றத்தால், சாரதிவேலையை இழந்த ஆறுமுகம் மனைவிமக்களின் பசித்தீயை அணைக்கத் தான் ஆளாக்கிய தேநீர்கடை முதலாளி முத்துராசாவிடம் கடனுதவிகேட்கப்போய், மனைவிகொடுத்த ஒரு ரூபாயை முத்துராசாவின் தேநீருக்குக் காசாகக்கொடுத்துவிட்டு, மானமிக்காதவராகத்திரும்புகிறுர். மென்மையான சுதாராஜின் கதைகள் தன்மானமெனும் வைரம் பாய்ந்த மனதில் பூத்தமலை என்றே கூறத் தோன்றுகிறது',

சுந்தரின் இந்தக் குறிப்பை விட என்னுல் வேறு வார்த்தைகள் சொல்லத் தெரியவில்லை!

'கொழுத்த' சீதனம் வாங்கி கொழும்பில் அறை எடுத்து அங்கும் இங்கும் அரைகுறைச் சீவியம் நடாத்தும் கிளறிக்கல் உத்தியோகக் காரர் ஒருவரின் அவல வாழ்க்கை 'சுகங்களும் சுமைகளும்';

அறைவாடகைகூடக் கொடுக்க முடியாமல் திண்டாடும் கதிரவேலுவை எதிர்நோக்கும் பிரச்னைகளை அருமையாகஎழுதியிருக்கிறுர்!

வெளிநாட்டில் படிக்கப் போன ஒரு இளைஞனுக்கு ஏற்பட்ட அனுபவத்தினை 'ஏக பத்தினி விரத'த்தில் சித்தரித்திருக்கிறுர்.

### ஒரு தேவதையின் குரல்

இனக்கலவரத்தினுல் பாதிக்கப்பட்டு 'கப்பலில்' தாயகம் வந்துசேர்ந்த இருவர் குடும்பக் கஷ்டத்தினுல் மீண்டும் தென்னிலங்கை செல்லுகிறுர்கள். அங்குபோகும்போது பஸ்ஸுக்குள் ஒரு பிரச்னை! சில காடையர்கள் தமிழர்களைத் தாக்கந் போகிற கட்டத்தில், 'ஒரு தேவதையின் குரல்' இப்படி ஒலிக்கிறது:-

''எங்களுடைய சிங்கள ஆக்களும் எத்தனையோபேர் இருந்தனீங்கள்தான்... ஒருவர் கூட எழுந்து எங்களுக்கு இடம் தரவில்லை! அந்தத் தமிழ்ப்பிள்ளைகள் தான் மனிசத் தன்மையுடன் இடம்தந்தார்கள்.. இவ்வளவு நல்லது செய்த பிள்ளைகளுக்கு நீங்கள் எல்லாம் செய்யிறது நியாயம்தானு?''

அந்தக் கதையை 'சுதா' தனக்கே உரியபாணியில் இப்படி முடிக்கிறுர்.

''அருணுசலம் அந்தப்பெண் கூறிய வார்த்தைகளை எண்ணி நன்றிப் பெருக்குடன் அவளை நோக்கினுர்.

''அக்கிரமங்களை அழித்தொழித்து, உலகை உய்விக்கிற பத்திரகாளி தெய்வத்தைத் தரிசிக்கின்ற பக்தி நெஞ்சில் முட்டியது!''

வாழ்க்கையைக் கரைத்துக் குடித்த அனுபவசாலியைப் போல் எழுதுவதில் இந்த சுதாராஜ் மிகவும் கெட்டிக்காரர்!

''இரண்டு வருடங்களுக்கு மேல் நான் அந்தக் கிழவனை ஆதரித்து வந்தேன். பின்னர் மெதுவாக என் தர்மபத்தினியின் நச்சரிப்புத் தொங்கியது. தூரத்து முறையிலோ அல்லது நெருங்கிய விதமாகவோ என் மனைவியின் உறவுக்காரராக இல்லாமற் போய்விட்டது கிழவனின் துரதிர்ஷ்டம்!''

—'பாதைகள் மாறினும்' என்ற இந்தக் கதையில்வரும் கிழவன் கடைசியில் தன்னிடமிருந்த இரண்டுரூபாவை எடுத்துக் கொடுக்கிபோது, கதையின் 'ஹீரோ' வால் சண்ணீரை அடக்க முடியாமல் போய்விடுகிறது!

கதையை தானேபாத்திரமாக மாறி நகர்த்தும்போது நம்மை மறந்து நாமும் எழுத்தவளருடன்று ஒன்றிவிடுகின்றேம்.

## சுவீப்முடிவுகள்

(கொழும்பு)

நேற்று முன்தினம் அதிர்ஷ்டம் பார்க்கப்பட்ட 938-வது தேசிய சுவீப் முடிவுகள் வருமாறு:

முதலாம் பரிசு
**05 W 0095**
ரூ. 1,400,40

இரண்டாம் பரிசு
**08 E 0388**
ரூ. 52,515

மூன்றும் பரிசு
**02 Z 0999**
ரூ. 17,505

ரூ. 630-18 சதம் பெறும் 100 டிக்கட்டுகளின் விபரம் வருமாறு:

| | |
|---|---|
| 06 A 0478 | 11 A 0161 |
| 12 A 0174 | 14 A 0833 |
| 02 B 0333 | 06 B 0537 |
| 12 B 0022 | 12 B 0247 |
| 13 B 0378 | 14 B 0712 |
| 15 B 0635 | 06 C 0882 |
| 09 C 0544 | 01 D 0408 |
| 08 D 0944 | 15 D 0039 |
| 13 E 0532 | 01 F 0514 |
| 04 F 0311 | 04 F 0865 |
| 07 F 0176 | 09 F 0026 |
| 11 F 0149 | 11 F 0546 |
| 10 G 0542 | 13 G 0018 |
| 14 G 0999 | 03 H 0701 |
| 05 H 0893 | 15 H 0208 |
| 15 H 0509 | 08 J 0749 |
| 02 K 0603 | |
| 11 K 0459 | 12 K 0900 |

| | |
|---|---|
| 12 K 0989 | 14 K 0769 |
| 06 L 0450 | 06 L 0737 |
| 14 L 0163 | 15 M 0132 |
| 15 M 0666 | 05 N 0664 |
| 05 N 0670 | 14 N 0495 |
| 07 O 0018 | 08 O 0460 |
| 11 O 0346 | 01 P 0054 |
| 04 P 0214 | 09 P 0249 |
| 13 P 0705 | 03 Q 0947 |
| 07 Q 0055 | 11 Q 0591 |
| 13 R 0160 | 13 R 0805 |
| 14 R 0059 | 03 S 0667 |
| 05 S 0194 | 09 S 0591 |
| 10 S 0719 | 02 T 0240 |

| | |
|---|---|
| 10 T 0962 | 11 T 0339 |
| 12 T 0767 | 13 T 0978 |
| 14 T 0054 | 15 T 0001 |
| 01 U 0430 | 03 U 0335 |
| 04 U 0185 | 07 U 0767 |
| 13 U 0202 | 13 U 0372 |
| 04 V 0375 | 08 V 0754 |
| 14 V 0922 | 02 W 0014 |
| 07 W 0834 | 08 W 0498 |
| 10 W 0589 | 10 W 0680 |
| 11 W 0320 | 01 X 0589 |
| 02 X 0443 | 06 X 0514 |
| 08 X 0318 | 10 X 0944 |
| 12 X 0232 | 12 X 0946 |
| 05 Y 0892 | 08 Y 0389 |
| 09 Y 0629 | 13 Y 0308 |
| 03 Z 0141 | 08 Z 0911 |
| 10 Z 0007 | 11 Z 0868 |
| 12 Z 0154 | |

(இவை யாவும் உறுதிப்படுத்தப்படவேண்டும்.)

### தங்கைகளுக்காக வாழ்ந்த அண்ணன்

தன் தங்கைகளுக்காக வாழ்ந்து, திருமணம் செய்யாமல், கடைசிக் காலத்தில் தன் சகோதரி, மைத்துனர், மருமக்களால் அவர் நேசித்த குட்டை நாயோடுகோவிலிலுவிளகொட்டிலுக்கு அனுப்புவது நெஞ்சத்தை ஊடறுத்து இதயத்தைத் தொட்டு விடுகிறது.!

ஹோட்டலில் முதலாளிக்கு விசுவாசமாக வேலைசெய்யும் ஒரு அப்பாவியின் கதையின் சர்வர் 'வைத்தி' சுதாராஜ் தான்! உண்மையாக சர்வராகவே மாறிவிட்டார்!

தன்பிள்ளைகளுக்கு நாலு வடை கொண்டுபோதற்கு அவன் படுகிறபாடு—

சில முதலாளிகளுக்கு 'அதி விசுவாசி'களாக இருந்து, மாடாக உழைத்து கடைசியில் அதற்குக் கிடைக்கும் பலனை இக்கதையில் தெளிவு படுத்தியுள்ளார்! அந்த 'நான்கு வடை'க் காசும் அவன் கணக்கில்பதியப்படும் போதுதான்—அவர் உண்மையை உணர்கிறுர்!

குவைத் நாட்டில் மின் பொறியிலாளராகக் கடமையாற்றும் 'சுதாராஜி'ன் 'பலாத்காரம்' என்ற சிறுகதைத் தொகுப்பு நூலும், வீரகேசரிப் பிரசுரமாக 'இளமைக் கோலங்கள்' என்ற நாவலும் வெளிவந்துள்ளன!

இப்போது வெளிவந்துள்ள 150 பக்கங்கள் கொண்ட இந்தக் 'கொடுத்தல்' மூலம் தமிழில் சிறுகதை எழுவதில் தனித்துவமுள்ளவர் என்ற முத்திரையைச் 'சுதா' தன தாக்கிக் கொள்கிறுர்.

'சிரித்திரன்' அச்சகத்தில் பதிப்பிக்கப்பட்டுள்ள இந்த நூலின் அட்டையை அழகுபடுத்தியுள்ளார் நாடறிந்த நமது ஓவியர் ரமணி. நூலின் உள்ளே, ஒவ்வொரு கதையும் ஆரம்பமாவதற்கு முன்பாக ஒரு பக்கப் படமாக நவீன பாணி ஓவியங்களை வரைந்திருக்கிறுர் 'சுதா'வின் சகோதரர் குணசிங்கம்(ரகன்).

இந்தத் தொகுதியை நம்பி வாங்கிப் படிக்கலாம்!

—ராஜகோபால்

# மந்திகை உப தபால் நிலையத்தை தரம் உயர்த்தக் கோரிக்கை

(புலோலி)

மந்திகை உப-தபால் நிலையத்தை தபால் நிலையமாகத் தரமுயர்த்தித் தருமாறு புலோலி தெற்கு கிராமோதய சபை தபால் தந்தி அமைச்சரைக் கோரியுள்ளது.

இக் கிராமோதயசபைக் கூட்டம் புலோலி மெதடிஸ்மிஷன் தமிழ் கலவன் பாடசாலை மண்டபத்தில் தலைவர் திரு. சே. வீணுகோபால் தலைமையில் நடைபெற்றது.

இக் கூட்டத்தில் புலோலியில் 2,500 வீடுகள்வரை இருப்பதாகவும் பல வர்த்தகர்கள், பல அரசாங்க ஊழியர்களும், முக்கியமாக பருத்தித்துறை அரசினர் வைத்தியசாலை, புலோலி கமநலச்சேவை நிலையம், புலோலி விவசாய விஸ்தரிப்பு அலுவலகம், மாவட்ட சுகாதார அலுவவகம் கால்நடை வைத்திய அதிகாரியின் பணிமனை, யாழ். மாவட்ட அபிவிருத்திச்சபை புலோலி உப- அலுவலகம், பொதுசன நூலகம், மதுவரி அலுவலகம்' அரசாங்க வேலைப்பகுதி அலுவலகம், புற்றளை மகாவித்தியாலயம், மெதடிஸ்மிஷன் பாடசாலை, புலோலி பலநோக்குக் கூட்டுறச்சங்க பணிமனை, புலோலிசந்தை ஆகியனவும் இருப்பதனுல் இவற்றின் நடவடிக்கைகளை இலகுவாக மேற்கொள்வதற்கும் வசதியாக இவ் உபதபால் நிலையத்தைத் தபால் நிலையமாகத் தரமுயர்த்த வேண்டியது மிக முக்கியமாகும் என்பது சுட்டிக் காட்டப்பட்டு இது சம்பந்தமாக தபால் தந்தி அமைச்சருடன் தொடர்புகொள்ள வேண்டும் என்றும் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

இதன் பிரதிகள் யாழ். மாவட்ட அமைச்சர், யாழ். மாவட்ட அபிவிருத்திச்சபைத் தலைவர், பருத்தித்துறை எம். பி, யாழ். அரச அதிபர், யாழ். தபால், தந்தி அத்தியட்சகர் ஆகியோருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

# "நாளைய சமுதாயத்தை காத்திரமாக வளர்ப்போம்"

**விக்ரோறியா பரிசளிப்பு விழாவில் பேச்சு**

[சுழிபுரம்]

'மாணவர்களின் எதிர்காலம் மிகவும் ஒளிமயமானதாக அமைய ஒழுக்கம், கட்டுப்பாடு மிகவும் அவசியமாகும். கடினமான உழைப்பின் மூலமாக முன்னேற்றத்தை அடையலாம். இன்று கல்வியமைச்சு எடுத்துவரும் நடவடிக்கைகள் கல்வியின் முன்னேற்றத்திற்கு நல்லவையாக அமைந்துள்ளன. இவற்றை நாம் நன்கு பயன்படுத்தி மாணவ சமூகத்தை மேன்மையடையச் செய்ய வேண்டும். நாம் கட்டுப்பாட்டுடன் எடுக்கும் காரியங்கள் யாவும் நல்ல பயனைத்தரும். ஆகவே, நாம் நாளைய நமது சமூகத்தைத் திறமைமிக்கவர்களாக, காத்திரமுள்ளவர்களாகத் திகழச்செய்யும் பணியில் ஒழுங்குடன் செயல்பட்டுப் பயன் காண்போம்''.

இவ்வாறு வடமாகாண கல்விப் பணிப்பாளர் திரு. எம். சிமியாம்பிள்ளை சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு பேசுகையில் குறிப்பிட்டார்.

விழாவிற்கு கல்லூரி அதிபர் திரு. க. அருணுசலம் தலைமை வகித்தார்.

வட்டுக்கோட்டைத் தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினர் கலாநிதி நீலன் திருச்செல்வம் கொழும்பிலிருந்து வராததால் கல்விப் பணிப்பாளர் திரு. எம். சிமியாம்பிள்ளையே பிரதம விருந்தினராகவும், தாபகர் தின ஞாபகப் பேருரையையும் நிகழ்த்தினுர். பரிசளிப்பையும் கல்விப் பணிப்பாளரே நிறைவு படுத்தினுர்.

திரு. ம. சிமியாம்பிள்ளை மேலும் பேசுகையில் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி வரலாற்றில் மனேச்சர் செல்லப்பா, அதிபர் சிமோல், சைவப் பெரியார் ஸ்ரீலஸ்ரீ சிவபாதசுந்தரனுர் அதிபர் எஸ். சுப்பிரமணியம் ஆகியோர் எப்பொழுதும் முதன்மையான இடத்தை பெற்றுக் கொள்வார்கள். இக்கல்லூரி அண்மையில்தான் நூற்ருண்டு விழாவை மிகச் சிறப்பாகக் கொண்டாடியது. நூற்ருண்டு விழாவை சிறப்பாகக் கொண்டாடிய அதிபர் திரு. வை. இராசசுந்தரம் இன்றைய விழாவில் பங்கு கொண்டது மிகவும் பாராட்டத்தக்சதாகும். பல அறிஞர்களை பெரியார்களை உருவாக்கி வரும் இக் கல்லூரிக்கு என்றும் ஓர் தனியான இடம் உண்டு. கல்விப் பணிக்காக சேவை செய்த யாரையும் நாம் மறவாது பாராட்ட வேண்டியது நமது கடமையாகும்' என்ருர்.

### டாக்டர்...

[4-ம் பக்கத் தொடர்ச்சி]

டமிட்டு அத்தியாவசிய சேவைகளையும், பொருட்களின் விநியோகத்தையும் பாதிக்கும் வகையில் செயல்படுகின்றது. எனவே இன்னும் காலதாமதமின்றி தமிழ் மக்கள் பிரச்சனையைத் தீர்ப்பதன்மூலம் மக்களை இன்னேரன்ன இன்னல்களுக்கு உட்படுத்தாது நாட்டின் ஐக்கியத்தையும் அமைதியையும் இனங்களுக்கிடையே சமத்துவத்தையும் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையையும் நிலைநாட்டவேண்டியது அரசின் பொறுப்பாகும்.

(மா)

# "சீனிக்குபதில் பனங்கட்டியை பாவிக்க பழக வேண்டும்"

## நெடுந்தீவில் ஐ. நா. நிபுணர் ஆலோசனை

(புலோலி)

''அதிக பனைவளத்தைக் கொண்ட நெடுந்தீவு மக்கள் பனங்கட்டியைப் பயன்படுத்தாமல் இருப்பது எனக்கு வியப்பை அளிக்கின்றது. சீனிக்குப் பதிலாக பனங்கட்டியைப் பாவிப்பதற்கு நமது மக்கள் தம்மைப் பழக்கப்படுத்திக் கொள்ளவேண்டும்''.

இவ்வாறு காமன்வெல்த் நாடுகளின் பனைத்தொழில் நிபுணரும், இலங்கை அரசின் விசேட பனை அபிவிருத்தி ஆலோசகருமான திரு. கே. சம்பந்தம் கேட்டுக்கொண்டார்.

நெடுந்தீவு பலநோக்குக்கூட்டுறவுச்சங்கத்தில் நடைபெற்ற கருத்தரங்கில்பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார். இக்கருத்தரங்கு நெடுந்தீவு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தலைவர் திரு. நா. இராமச்சந்திரன் தலைமையில் நடைபெற்றது.

திரு. சம்பந்தம் தொடர்ந்து பேசுகையில் சொன்னதாவது:

''பனைத்தொழிலில்ஈடுபட்டுள்ள குடும்பங்களுக்குஊக்குவிப்பு உதவிகள் வழங்கப்பட வேண்டியது அவசியம். முக்கியமாக அவர்கள் உற்பத்தி செய்யும் பனம் பொருட்களை வாங்கிச் சந்தைப்படுத்தப்பலநோக்குக் கூட்டுறவுச்சங்கம் முன்வர வேண்டும்.

''நெடுந்தீவில் பதநீர் உற்பத்தியில் அதிககவனம் செலுத்துவதுடன் பனங்கட்டி உற்பத்தியும் ஆரம்பிக்கப்பட வேண்டும். அடுத்த ஆண்டிலாவது ஒரு லட்சம் ரூபா பெறுமதியான பனங்கட்டி இங்கு சந்தைப்படுத்தக் கூடியதாக உற்பத்தி செய்யப்படவேண்டும். இப் பலநோக்குக்கூட்டுறவுச்சங்கம் இங்கு உற்பத்தியாகும் பனங்கட்டியைக் கொள்வனவு செய்யத் தயாராக இருப்பது மகிழ்ச்சியளிக்கின்றது.

''நெடுந்தீவு கிராமோதய சபைத்தலைவர் பொதுமக்கள் மத்தியில் பனங்கட்டி பாவிக்கப்படவேண்டிய அவசியத்தை வலியுறுத்தி அவர்கள் பனங்சட்டியைச் சாப்பிடுவதற்கும் பழக்கப்படுத்திக் கொள்ள வேண்டும்'' என்றார்.

# திருமலைச் சம்பவங்கள்: அரசு பதிலளித்தாகவேண்டும்

(யாழ்ப்பாணம்)

''அவசரகாலச்சட்டம், பயங்கரவாத தடைச்சட்டம், பொதுஜன பாதுகாப்புச்சட்டம், போன்ற சட்டங்களை அரசு கையில் வைத்துக் கொண்டுள்ள அதேவேளையில் திருமலையில் ஒன்றுமறியாத அப்பாவித் தமிழ்மக்களின் உயிர், உடைமைகள் பறிக்கப் பட்டுள்ளது. இதற்கு அரசு பதிலளித்தேயாகவேண்டும். பயங்கரவாதம் எங்கு நடந்தாலும் எமதுகழகம் அதனை வன்மையாகக் கண்டிக்கிறது.''

இவ்வாறு அனைத்து இலங்கை அ. தி. மு. க. அமைப்புச் செயலாளர் திரு. பொன். மதிமுகராசா விடுத்துள்ள அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளார்.

அவர் அவ்வறிக்கையில் மேலும்தெரிவித்துள்ளதாவது:

''தமிழ்மக்கள் வாழும்பாரம்பரிய பூமியான திருமலையில் நடைபெற்ற சம்பவங்களைப் பார்க்கும்போது படைபலம் பொருந்தியவர்களால் இத்தகைய சம்பவங்களைச் செய்ய முடியும் என்ற தொருநிலை உருவாகியுள்ளது. இச்சம்பவங்கள் தொடர்பாக விசாரணைக் குழுவை நியமித்தால் உண்மை நிலைதெரியவரும்.''

''திருமலையில் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு உடன் நிவாரணம் வழங்கவேண்டியது ஒவ்வொரு தமிழீழனின் தலையாய கடமையாகும். திருமலை மாவட்ட அமைச்சர் அங்கு இடம்பெற்ற சம்பவங்களினால் மனம்வெதும்பி ராஜினுமாச்செய்யப்போவதாகத் தெரிவித்திருந்தார். இதிலிருந்து அங்கு இடம்பெற்ற சம்பவங்கள் எவ்வளவு கொடூரமானவை என்பதை எண்ணிப் பார்க்கமுடியும்.

''இத்தகைய மனிதாபிமான மற்ற சம்பவங்களுக்கு எதிராக ஹர்த்தால் அனுஷ்டிக்கும்படி கோரிய தமிழீழவிடுதலை அணி தலைவர் தலைவர் டாக்டர் எஸ். ஏ. தர்மலிங்கத்தையும், அதன் செயலாளர் திரு. கோவைமகேசனையும் கைதுசெய்து சிறையில் வைத்திருப்பது தார்மீகத்திற்கு முரணான செயலாகும்.

இதேபோன்று தமிழ்மக்களின் சுதந்திரக்கருத்துக்களை உலகிற்கு வெளிக்காட்டிய 'சுதந்திரன்' 'சற்றடேறிவியூ' ஆகிய பத்திரிகைகளுக்கு தடைவிதித்திருப்பதும் பத்திரிகைச் சுதந்திரத்திற்கே மாறானதாகும்.'' (மா)

## பளை வித்தியாலயம்

# மூன்றுண்டுகளில் கண்ட துரித வளர்ச்சி

### ஆனந்தசங்கரி வியப்பு

(யாழ்ப்பாணம்)

''பளை மகாவித்தியாலயத்தின் வரலாற்றில் முதன்முறையாக நடந்தேறும் இந்தப் பரிசளிப்பு விழாவில் பிரதமவிருந்தினராகக் கலந்துகொள்வதில் பெருமையும் பூரிப்பும் அடைகிறேன். இவ்விழாமுதன்முறையாக நடைபெறுகிறது என்றாலும், விழாவின்தரமும்அமைப்பும் பெரும் பள்ளிக்கூடங்களே கண்டு வியக்கும் அளவிற்கு ஒப்பீடில்லா அளவிற்கு உயர்ந்துள்ளது''

இவ்வாறு பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட கிளிநொச்சி எம். பி. திரு. வீ. ஆனந்தசங்கரி பளை மகாவித்தியாலயத்தில் நடந்த பரிசளிப்பு விழாவில் உரையாற்றுகையில் கூறினார்.

அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது: ''கடந்த மூன்றுண்டுகளில் இவ்வித்தியாலயத்தின் துரித வளர்ச்சி, காண்போர், கேட்போரின் இதயத்தில் பெரும் மகிழ்ச்சியை உண்டாக்குகிறது இவற்றிற்கொல்லாம் காரணமான இவ்வித்தியாலயத்தின் அதிபர் அ. பொ. செல்லையாவின் தலைமையின்கீழ் கடமையாற்றிவரும் ஆசிரியர் குழாத்தையும் மனமார வாழ்த்திப் பாராட்டுகிறேன்.

''இன்றைய மாணவர்களின் கல்வியில் பாதிப்பு ஏற்படுமாயின் நாளைய சமுதாயம் பாதிப்படையும். ஆதலால் கல்வித் தத்துவத்தை அமுல்படுத்துவதை நாம் வித்தியாலயங்களோடு விட்டுவிடவேண்டும்.

''வித்தியாலயங்களின் கல்வி முறையில் வெளியார் தலையீடு இருக்கக்கூடாது. வெளியார் தலையீடு இருக்குமானால் அந்தப் பள்ளிக்கூடம் குட்டிச்சுவராகிவிடும்.

''கிளிநொச்சித் தொகுதியின் கல்வி எப்படி இருக்க வேண்டும் என்பதை பாராளுமன்ற உறுப்பினராகிய நானே திட்டமிடவேண்டும். கிளிநொச்சித் தொகுதியின் கல்வி எப்படி இருக்கவேண்டும் என்பது எனக்குத்தெரியும். எனது கடந்த பதின்மூன்றுண்டு காலக் கல்வித்தத்துவக்கனவை நனவாக்கிய வித்தியாலயம் இந்தப் பளை மகாவித்தியாலயந்தான்.

''ஏனைய எனது தொகுதிப் பாடசாலைகள் இதனைப் பின்பற்றிச் சாதனைகள் புரியவேண்டும்'' என்றார்.

சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட வடமாநிலக் கல்வியதிபதி திரு. ம. சிமியாம்பிள்ளை பேசுகையில்: ''எல்லோருடைய பாராட்டையும் கவனத்தையும் ஈர்க்கக்கூடியதாக மிகவும் எடுப்பாகஅமைந்திருக்கிறது இந்தப்பரிசளிப்பு விழா. முதன்முறை என நம்பிட முடியாதளவுக்கு எல்லா அம்சங்களும் மிகவும் திறமையாகக் கவனிக்கப்பட்டு, அரங்கேற்றப்பட்டுள்ளது'' என்று கூறினார்.

பரந்தன் வட்டாரக் கல்வியதிகாரி திரு- அ. தங்கராசா வாழ்த்துரை வழங்கினார்.

## மகாகும்பாபிஷேகம்

(கரவெட்டி)

உடுப்பிட்டி வடக்கு நெற்கொழுவைரவர் ஆலய மகா கும்பாபிஷேகம் நாளை 15ம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெறும். இதனை வல்வைஅருள்மிகு முத்துமாரியம்மன் பிரதம குருவான சித்தாந்த ஞான தேசிகபானு ஸ்ரீலஸ்ரீ சோ. தண்டபாணிதேசிகர் நடாத்துவார்.

இக்கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து 45 நாட்கள் மண்டலாபிஷேகம் நடைபெறும்.

## யாருடையது?

வாரத்தில் ஐந்துநாட்கள் பிரயாணம்செய்யக்கூடிய இ. போ. ச. பிரயாண பருவச்சீட்டு ஒன்றினை திரு. எம். செல்லத்துரை என்பவர் கண்டு எடுத்து 'ஈழநாடு' காரியாலயத்தில் ஒப்படைத்துள்ளார். உரியவர் தகுந்த அத்தாட்சி காட்டிப்பெற்றுக்கொள்ளவும்.

# "கிராமிய அபிவிருத்தியில் அரசு அதிக அக்கறை!"

### பரு. மேலதிக அரசாங்க அதிபர் பேச்சு

(புலோலி)

'கிராமிய அபிவிருத்தியினூடுதான் நாட்டின் அபிவிருத்தியை மேம்படுத்த முடியும் என்பதனாலேயே அரசாங்கம் கிராமிய அபிவிருத்தியில் அதிக கவனமெடுத்து வருகின்றது. கிராமிய அபிவிருத்தி அரசாங்கம் மேற்கொள்ளும் சகல நடவடிக்கைகளுக்கும் கிராமிய மக்கள் ஒத்துழைப்பு வழங்கி அவற்றினைச் சிறப்பாகப் பயன்படுத்திக்கொள்ள கொள்ள வேண்டும்'

இவ்வாறு, பொலிகண்டி கரையோர கிராம அபிவிருத்தி மகளிர் சங்கத்தில் தையல் பயிற்சி நிலையமொன்றைஆரம்பித்து வைத்து உரையாற்றிய யாழ். மேலதிக அரசாங்க அதிபர் திரு. பி. பற்றிக் குறிப்பிட்டார்.

பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர் திரு. வை. வேலும்மயிலும் தலைமையில் நடைபெற்ற இத்தையல் பயிற்சி ஆரம்ப விழாவிலே தொடர்ந்து உரையாற்றிய மேலதிக அரசாங்க அதிபர் திரு. பற்றிக் குறிப்பிட்டதாவது:

'கிராமப் பகுதிகளில் உள்ள மக்களைச் சிறுகைத்தொழில் முயற்சிகளில் ஈடுபடுத்த அரசாங்கம் பல நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது. இதனடிப்படையிலேயேஇன்று இங்கு இத்தையல் பயிற்சி நிலையம் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது. அரசாங்கம் வழங்கும் இதுபோன்ற உதவிகளை முழுமையாகப் பயன்படுத்த வேண்டும். இப்பகுதி பாராளுமன்ற உறுப்பினரின் ஒத்தாசையுடன் அமைக்கப்பட்டுள்ள இத்தையல் பயிற்சி நிலையம் சிறப்பாக இயங்கி இப்பகுதியில் தையல் பயிற்சியை மேற்கொள்ள விரும்பும் பெண்களின் உயர்ச்சிக்கு வழிவகுக்க சகலரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவி திருமதி காசி. ரஞ்சிதம் நன்றியுரை கூறினர்,

## ஐ. பி. கணேசநாதன் மேன்முறையீடு

(கொழும்பு)

சமசமாஜக்கட்சிப் பிரமுகர் திருமதி விவியன்குணவர்த்தனு கைதுசெய்யப்பட்டது தொடர்பாக அவர் தாக்கல்செய்திருந்த அடிப்படை உரிமைமீறல் வழக்கில் இன்ஸ்பெக்டர் வி. கணேசநாதன் குற்றவாளியாகக் காணப்பட்டதை எதிர்த்து திரு. கணேசநாதன் உயர்நீதி மன்றத்தில் மனுவொன்றைத் தாக்கல்செய்துள்ளார்.

தமக்கு எதிராக வழங்கப்பட்ட தீர்ப்பை மாற்றும்படியும் அல்லது ரத்துச்செய்யும் படியும் அவர் தமது மனுவில் கோரியிருக்கிறார்.

குறித்த வழக்கில் தாம் ஒரு பிரதிவாதியாகக் குறிப்பிடப்படவில்லையென்றும் தாம் நீதிமன்றத்தில்விளங்கப்படவில்லையென்றும் அவர் தமது மனுவில் தெரிவித்துள்ளார்.

## பரு.சிவன்கோவில் உற்சவம்

(புலோலி)

பருத்தித்துறை புலோலி பசுபதீஸ்வரர் (சிவன்கோவில்)வருடாந்த சிவன் உற்சவம் கடந்த 30 ம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. இன்று காலை 8 மணிக்கு இரதோற்சவமும் நாளை தீர்த்தோற்சவமும் நடைபெறவுள்ளன.


யாழ்நகர் மக்களுக்கு மகிழ்ச்சியான செய்தி

வெளிநாடுகளுக்கு செல்வதற்கான விமானச்சீட்டுகள், யாழ்நகரிலே பதிவுசெய்வதற்கு நம்பிக்கையான விமான சீட்டுகள் வழங்கும் ஒரே முகவர் நிலையம்.

குறெஸ் ட்ரவல் சேவிசஸ் [பிறை] லிமிட்.

05, நவீனசந்தை (மேல்மாடி) யாழ்ப்பாணம்.

ஹொலன்ட் (HOLLAND) வழியாக இத்தாலி (ITALY) பிரான்ஸ் (FRANCE) ஆகிய நாடுகளுக்கான பிரயாண சீட்டுகள் மற்றும் ஜேர்மனி (GERMANY), கனடா (CANADA), சிங்கப்பூர் (SINGAPORE) ஹொலன்ட் (HOLLAND) போன்ற நாடுகளுக்கான குறைந்த கட்டண பிரயாணசீட்டுகள், பிரயாணிகள் காசோலை, விசா (VISA)

கனடா, அமெரிக்கா செல்வதற்கு தேவையான ஒழுங்குகள்

மற்றும் பிரயாண ஒழுங்குகள் எதுவாலுைம் எம்முடன் தொடர்புகொள்ளுங்கள்.

CROSS TRAVEL SERVICES (PVT) LTD.

Approved Passenger Sales agent in Sri LanKa M/s swissair

Stage II Modern Market Ist Floor

BUS STAND CENTRE ROAD, JAFFNA. Phone 22040—22065

சாந்தி யாழ்.
தினசரி 3 காட்சிகள்
கடைசித்தினம் 15-7-83
தியாகம்
(கலர்)

வெஸ்லி (மானிப்பாய்)
தினசரி 4-15, 7-00
சனி, ஞாயிறு 1-40
முத்துராமன்—தேவிகா
நெஞ்சில் ஓர் ஆலயம்

ஸ்ரீதர் தினசரி 10-30, 2-00, 4-30 7-00
(யாழ்ப்பாணம்)
The Empire Strikes Back
வருகிறது
மூன்றும் பிறை

வெலிங்டன்
(யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30,
6-30, 9-30
பிரதாப்— சோபா
மூடுபனி

லிடோ (யாழ். நகர்)
சிவாஜி-மஞ்சுளா
மன்னவன்
வந்தானடி

ராணி தினசரி 10-30, 2-30, 6-15 மட்டும்
(யாழ். நகர்)
ஜனத்திரள் நிறைந்த 8-வது வாரம்
கமலஹாசன் - அம்பிகா
சகல கலா வல்லவன்

28-7-83 வரைமட்டும்
மனோகரா தினசரி 4 காட்சிகள்
3வது வெற்றி மாதம்
(யாழ். நகர்)
கமலஹாசன், ஜெய்சங்கர், ஸ்ரீதேவி
வாழ்வே மாயம்
(ஈஸ்ட்மன் கலர்)

வின்ஸர் (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
ஜெய்சங்கர்
கே. ஆர். விஜயா
வாயாடி
விரைவில் வருகிறது
ஆனந்த ராகம்

ரீகல்-Regal தினசரி 10-30, 2-00, 4-45
7-15 P. M.




இன்னும்
11 தினங்கள் மட்டும்
கபீர்பேடி....
சஞம் சூரி...
நடிக்கும்
"கேர்ல்
(f)ப்ரம்
இந்தியா"
GIRL
FROM
INDIA
TECHNICOLOR
இனிய நான்கு
ஹிந்திப் பாடல்கள்
உங்களை
மெய்மறக்கச் செய்யும்
வயது வந்தவர்கள்
மட்டும்

# இன்றைய பலன்

ஆனி 29ம் திகதி

வியாழக்கிழமை

(14—7—83)

மேடம்:- பூமியால் லாபம் உண்டு, புத்திர புகழும் சேரும், பொதுசனத் தலைமைக்கான வாய்ப்புக்கிடைக்கும், மனம்போல் வாழ்வு மலரும், கடமையாற்றுமிடத்தில் சகதொழிலாளர்களின் ஒத்துழைப்புக் கிடைக்கும்.

இடபம்:- நல்லதைச் செய்வீர்கள், பிரமுகர்கள் உங்களைத் தேடிவருவார்கள், சமூகத்தில் மதிப்பு உயரும், அரசியல் வாதிகளுக்கு நல்ல தினம், மேலதிகாரிகளின் ஆதரவு தாராளமாகக் கிடைக்கும், நண்பர்களின் தொடர்பு உண்டாகும்.

மிதுனம்:- அதிர்ஷ்ட தேவதையின் அணைப்பு உங்களுக்குக் கிடைக்கலாம், திரைப்படத் தொழிலில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு உற்சாகம் பெருகும், செல்வாக்குள்ள ஒருவரின் ஆதரவும் தப்பாமல் கிடைக்கும்.

கடகம்:- பணம் பறிபோவதற்கும் இடம் ஏற்படலாம், முகமன் பேசுவோர் விடயத்தில் முன்னெச்சரிக்கையுடன் இருக்கவும், அதிக சிந்தனைக்கு இடமளியாது வாய்வுப் பதார்த்தங்களை தவிர்க்கவும்.

சிங்கம்:- குமுறும் நெஞ்சுடன் நாளைக் கடத்துவீர்கள், எதிலும் அவசர முடிவை தவிர்த்துக் கொள்ளவும், பிரயாணத்தைப் பின்போடவும், வெளியூர்ச் செய்தி வேதனையைத் தரலாம்.

கன்னி:- மேடைப் பேச்சாளர்களும், நடிகர்களும் பெரும் புகழ் அடைவர், பொருள் வரவுக்கும் இல்லத்தில் திருப்திகரமான சூழ்நிலை உருவாகும், அந்தஸ்திலும் வியாபாரத்திலும் முன்னேற்றம் உண்டு.

துலாம்:- எதிலும் அவசரப் போக்கை கடைப்பிடிப்பீர்கள், தரக்குறைவான தகவல்கள் கிடைக்கும், பெரியவர் ஒருவடன் கருத்து வேற்றுமை தோன்றலாம், அடக்கம் நன்று

விருச்சிகம்:- பொருளாதார நிலையில் விருத்தி ஏற்படும், பொதுமக்களின் ஆதரவு கிடைக்கும், புதிய முதலீடுகள் வெற்றியைத் தேடித்தரும் வாகன சாரதிகளுக்கு சிறப்பான தினம்.

தனுசு:- நடுநிலை தவறுது நல்லதைச் செய்வீர்கள், உங்கள் புத்திக்கூர்மையை மற்றவர்கள் பாராட்டுவார்கள் குடும்ப வாழ்க்கை மகிழ்ச்சி நிறைந்ததாக இருக்கும்.

மகரம்:- மிகவும் நிதானத்துடன் காரியங்களில் ஈடுபட வேண்டும், எச்சந்தர்ப்பத்திலும் பணச் செலவுக்கு இடமுண்டு, சூழ்ச்சிவலை விரிப்பதற்கு எதிரிகள் முற்படுவார்கள், நிதானம் வேண்டும்.

கும்பம்:- எதிர்பார்த்த இன்பம் இன்று உங்களை அணைத்துக் கொள்ளும், ஆரம்பத்தில் முட்டுக்கட்டை போட்டவர்கள் இன்று ஆதரவு தருவார்கள், காதல் ஜோடிகளுக்கு பொன்னுன தினம்.

மீனம்:- இனம் தெரியாத கவலையால் சோர்வடைவீர்கள், வாய்வுப்பதார்த்தங்களை தவிர்த்துக்கொள்ளவும், சகோதரவழியால் கவலை தோன்றும்.

சோதிடக் கலாநிதி

திருமலை

**க. வேலுப்பிள்ளை**

ஹரன் (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-15
எம். ஜி. ஆர்— ஜெயலலிதா
நீரும் நெருப்பும்
(ஈஸ்ட்மன் கலர்)

ராஜா (யாழ்நகர்)
தினசரி 4 காட்சிகள்
பாக்யராஜ்- அம்பிகா
கல்லாப்பட்டி சிங்காரம்
நடித்த



அந்த 7 நாட்கள்
(கலர்)
கதைவசனம், டைரக்ஷன்
பாக்கியராஜ்
(இந்தியாவில் 100 நாட்களுக்கு மேல் ஓடிய வெற்றிச்சித்திரம்)

## புனித யாகப்பர் உற்சவம்

(சுண்டிக்குளி)

குருநகர் புனித யாகப்பர் ஆலய வருடாந்த உற்சவம் பதினுரும் திகதி ஆரம்பமாகி எதிர் வரும் இருபத்தைந்தாம் திகதி காலை பூசை மாலை திருச்சுரூபப் பவனியுடன் முடிவடையும். பங்குத்தந்தை வண. பிதா பீற்றர் துரைரத்தினம் இதற்கான ஒழுங்குகளைச் செய்துவருகிறுர்.

## வவனியா மேல் நீதிமன்றத்தில்

# ஆறு வழக்குகள் அடுத்த மாதத்துக்கு ஒத்திவைப்பு

(வவனியா)

வவனியா மேல் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப் படவிருந்த ஆறு வழக்குகள் அடுத்த மாதம் முதலாம் வாரத்துக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளன.

பின்வரும் திகதிக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப் படவிருக்கிறது.

வவனியா அம்பலாங்கொட ஹோட்டல் முதலாளி கொலை வழக்கு 8-ம் திகதி. காத்தான் குளம் சந்தன் கைத்தான் ஞானராஜா கொலை வழக்கு 1-ம் திகதி. வற்றுப்பளை யோகநாதன் கொலை முயற்சி 3-ம் திகதி.

தெட்சிணு மருதமடு இனக் கலவர இரட்டைக் கலவர கொலைவழக்கு 1-ம் திகதி.

கருவேலன் கண்டல் சிசுக் கொலை வழக்கு 1-ம் திகதி.

செட்டி குளம் பாலன் கொலை வழக்கு 8-ம் திகதி.

# லொறி கொள்ளை வழக்கில் எதிரிகள் குற்றவாளிகள்!

(சுண்டிக்குளி)

புதுக்குடியிருப்பு உதவி அரசாங்க அதிபர் அலுவலகத்தில் வைக்கப்பட்டிருந்த 26ஸ்ரீ6339 லொறியை கொள்ளையடித்துக் கடத்திச் சென்றதாக அதே இடத்தைச் சேர்ந்த மயில்வாகனம் கயிலாயபிள்ளை, மு. இராமசந்திரன், செ. இந்திரகுமார் ஆகிய மூவர் மீதும் ஒட்டிசுட்டான் பொலிசாரால் குற்றஞ்சாட்டி தொடரப்பட்ட வழக்கு முல்லைத்தீவு நீதிபதி திரு வீ. பி. சுந்தரலிங்கம் முன்னிலையில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது. விசாரணை முடிவில் எதிரிகளைக் குற்றவாளிகளாக கண்ட நீதிபதி தண்டனை வழங்குவதை ஒத்தி வைத்தார்.

## கொக்குவில் இந்து வெற்றி

(கோண்டாவில்)

கல்வித் திணைக்களத்தால் நடாத்தப்பட்ட 15 வயதுக்கு இடைப்பட்டவர்களுக்கான உதைபந்தாட்டப் போட்டியில் கொக்குவில் இந்துக் கல்லூரி யாழ். மத்திய கல்லூரியை 2—0 என்ற கோல்களால் வெற்றியீட்டியது.

17 வயதுக்குட்பட்டோருக்கான உதைபந்தாட்டப்போட்டியில் யாழ். மாவட்டத்தில் இருந்து அகில இலங்கை ரீதியில்நடைபெறஇருக்கும் உதைபந்தாட்டப்போட்டியில் கொக்குவில் இந்துக்கல்லூரி தெரிவு செய்யப்பட்டுள்ளது.

(வெ)

## சண்டிலிப்பாயில் மணிவாசகர் குருபூசை

(யாழ்ப்பாணம்)

நேற்று சண்டிலிப்பாய் இந்து விருத்திச் சங்கத்தின் ஆதரவில் மாணிக்கவாசகர் குருபூசை நடைபெற்றது. சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்ற இவ்விழாவில் தொழில் அதிபர் திரு. க. கனகராசா பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார். சண்டிலிப்பாய்க் கிராமோதய சபைத் தலைவரும் மேற்படி சங்கத்தின் தலைவருமான திரு. ம. பொ. செல்வரத்தினம் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவை முன்னிட்டுப் பாடசாலை மாணவர்களுக்கிடையிலான பேச்சுப் போட்டிகளும் திருவாசக மனனப் போட்டியும் சிறப்புச் சொற்பொழிவுகளும் இடம் பெற்றன.

(அ)

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

மல்லாகம்
மாவட்ட நீதிமன்றத்தில்
உடுவிலைச் சேர்ந்த காலஞ்சென்ற தம்பாப்பிள்ளை பெரியதம்பி என்பவரின் மரண சாதனமில்லா மரணச்சொத்தின் விடயத்தில்
— மரணமெய்தியவர்
தம்பாப்பிள்ளை பெரியதம்பி கைம்பெண் தங்கம்மா,
உடுவில் கிழக்கு, உடுவில்,
— மனுதார்
மரணசாதன
நியாயாதிக்கம் இல: 157

மேலேயுள்ள இலக்கங் கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர்குறிப்பிடப்பட்ட இறந்து போனவரின் மரணச் சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு, அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள்எவரும், 1983ம் ஆண்டு ஆவணி மாதம் 3ஆந் நாளன்று முற்பகல் 9-15 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி, அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாதென்பதற்குக் காரணங் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றுர்.

1983ம் ஆண்டு வைகாசி மாதம் 13ஆந் நாளாகிய இன்று தேதியிடப்பட்டது.

நீதிமன்றக் கட்டளைப்படி
**ஆ. சிவபாதசுந்தரம்**
பதிவாளர்

என்னுல் வரையப்பட்டது
**செ. இராமலிங்கம்**
மனுதாரின் சட்டத்தரணி
7761

# மன்னாரிலும் பஸ் சேவை 4 மணியுடன் ரத்து

## ஜீப் எரிப்பு: மாணவன் கைது

(மன்னார்)

மன்னார் ஆஸ்பத்திரியில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற ஜீப் எரிப்புச் சம்பவம் தொடர்பாக அப் பகுதியில் உள்ள 19 இளைஞர்கள் நேற்று முன்தினம் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டனர். விசாரணையின் பின்னர் 18 பேர் விடுதலை செய்யப்பட்டனர்.

சிவில் உடையில் வந்த இராணுவத்தினர் இவர்களைக்கைது செய்து டிரக்கில் ஏற்றி இராணுவ முகாமுக்கு கொண்டு சென்றனர். விசாரணையின் பின்னர் ஏனையோர் விடுதலை செய்யப்பட எஸ். யோகதாஸ் எனும் இளைஞர் இராணுவ முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

க. பொ. த. (உ. த.)மாணவனை இவர் சில பத்திரிகைத் துண்டுகளை பாடத் தேவைக்காக வைத்திருந்ததாகவும், இதனையே இராணுவத்தினர் சந்தேகம் கொண்டு இவரைத் தடுத்து வைத்திருப்பதாகவும் தெரிகிறது.

கைதுசெய்யப்பட்ட இளைஞர்கள் சிலரின் வீடுகளும் சோதனையிடப்பட்டன. இதனால் குறிப்பிட்ட இளைஞர்களின் பெற்றோர் மன்னார் எம். திரு. சூசைதாசனிடம் முறையிட்டதைத் தொடர்ந்து அவர் உயர் இராணுவ அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு இளைஞர்கள் விடுதலை செய்ய நடவடிக்கை எடுத்தார்.

மன்னாரில் சகல பஸ்சேவைகளும் நேற்று முன்தினம் தொடக்கம் நான்கு மணியுடன் ரத்துச் செய்யப்பட்டுள்ளது. அரசாங்க அதிபரின் அறிவித்தல் வரும்வரை தொடர்ந்து அமுல் செய்யப்படும் என்று மன்னார் பஸ் டிப்போ அத்தியட்சகர் தெரிவித்தார். இதனைத் தொடர்ந்து முருங்கன், சிலாபத்துறை, பண்டிவிரிச்சான், பெரியமடு, தலைமன்னார் ஆகிய இடங்களில் இரவு சேவைக்கு நிறுத்தப்படும் பஸ்களும் இப்போது அங்கு நிறுத்தப்படுவதில்லை. சில பஸ்கள் பாதுகாப்புக் கருதி தள்ளாடி சிலாபத்துறை இராணுவ முகாம்களில் இரவு நிறுத்தி வைக்கப்படுகின்றன.

தலைமன்னாரில் துறைமுகத்துக்கு பலத்த பாதுகாப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. ரயில் நிலையத்தில் ஆயுதம் தாங்கிய ரயில்வே பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் இரவுநேரத்தில் காவல் புரிந்து வருகின்றனர்.

நேற்று முன்தினம் மன்னார் கச்சேரியில் அரசாங்க அதிபர் திரு. செந்தில்நாதன் தலைமையில் உயர் அதிகாரிகளைக் கொண்ட பாதுகாப்பு சம்பந்தமான அந்தரங்க மகாநாடு நடைபெற்றது. மாலை ஏழு மணிக்குப் பின்னர் நகரில் சன நடமாட்டம் குறைவாக உள்ளது. பொலிஸ் ரோந்து நகரில் பலப்படுத்தப்பட்டுள்ளது. (சூ)

## விபத்தில் பலி

(அரியாலை)

அகில இலங்கைச் சிறுபான்மைத் தமிழர் மகாசபையின் முன்னாள் செயலாளர் திரு.வி.டி. கணபதிப்பிள்ளை பெரிய கடை பஸ் நிலைய பகுதியில் மோட்டார் சைக்கிளினால் மோதுண்டு யாழ். அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மரணமானார்.

## அரசு...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

பாடநேரங்களிலும் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. ஒவ்வொரு பாடநேரமும் 10 நிடடத்தால் குறைக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

பாடசாலையில் சேவையில்ஈடுபட்டுள்ள சகல பாடசாலை பஸ்களும் நேற்றுப் பிற்பகல் 2-30 மணிக்குப் புறப்பட்டன. தொடர்ந்தும் பாடசாலை பஸ்கள் 2-30 மணிக்குப் புறப்படும்.

யாழ். மாவட்டத்தில் அரசாங்க திணைக்களங்கள் அனைத்தும் நேற்று முதல் மறு அறிவித்தல்வரை பிற்பகல் மூன்று மணிவரை மட்டுமே இயங்கும் என்று அறிவிக்கப்பட்டது.

## மாணவர்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கிறது.

திருகோணமலையில் நேற்று சென். மேரிஸ் பெண்கள் பாடசாலை வளவில் இனந்தெரியாத நபர்களினால் குண்டு ஒன்று வீசப்பட்டபோதிலும் யாருக்கும் காயமேற்படவில்லை.

இதேநேரத்தில் வகுப்புகளை மாணவர்கள் தொடர்ந்து பகிஷ்கரித்து வருகின்றனர். இப்பகிஷ்கரிப்பு எதிர்வரும் வெள்ளிக்கிழமை வரை இடம்பெறும் என்று மாணவர் பேரவை தெரிவித்தது.

### குருநகர் இளைஞன் கைது

நிலைமை இவ்வாறிருக்க, யாழ்ப்பாணம் குருநகரைச் சேர்ந்த நாகன்பொன்னம்பலம் எனும் இளைஞன் நேற்று முன்தினம் ஆயுதப்படையினரால் கைதுசெய்யப்பட்டார்.

பஸ்ஸில் பிரயாணம்செய்த போது கைதுசெய்யப்பட்ட இவர்; திருகோணமலை பதில் நீதிபதி எம். கே. செல்வராஜா முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டபோது இம் மாதம்21-ம்திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

மகாவிளான்குளம் மாரிமுத்து இராமசாமியின் வீட்டை கடந்த மாதம் 29ம் திகதி எரித்ததுதொடர்பாக கைதுசெய்யப்பட்ட சுமணதாச என்பவர் பதில் நீதிபதி எம். கே. செல்வராஜா முன்னிலையில் நேற்று ஆஜர்செய்யப்பட்டபோது 21ம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டது.

## விளையாட்டுப் போட்டி

(கல்வியங்காடு)

நல்லூர் புனித பெனடிக்ற் றோ. க. பாடசாலை விளையாட்டுப் போட்டிகள் இன்று வியாழக்கிழமை நடைபெறுகிறது. ஆசிரியர்—மாணவர் சிற்றுண்டி விருந்தும் அன்று இடம்பெறும். (அ)

## விசாரணைக்குழு...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வரத்தினால் 20பேர் பலியானார்கள். 250 குடும்பங்கள் இருப்பிடங்களை இழந்து விட்டன. 1,500 பேர் அகதிகளாகிவிட்டனர். 700 அகதிகள் ஏழு அகதிகள் முகாம்களில் உள்ளனர். 12 இந்துக் கோவில்கள் சேதப்படுத்தப்பட்டுள்ளன'' என்றும் திரு. தங்கத்துரை குறிப்பிட்டார்.

### திருமலை சம்பவங்கள்:

## உதவி அளிக்கக் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

''திருகோணமலைச் சம்பவங்களின்போது பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவியளிக்க ஒரு குழு நியமிக்கப்பட்டுள்ளது. இந்த சம்பவங்களினால் பாதிக்கப்பட்டோருக்கு உதவியளிக்க வேண்டியது எமது கடமை. பண உதவியையும், பொருள் உதவியையும் அளிக்குமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்'' என்று வட்டுக்கோட்டை எம். பி. திரு. நீலன் திருச்செல்வம் விடுத்துள்ள அறிக்கையொன்றில் கேட்டுக் கொண்டுள்ளார்.

## இப்படியும் நடக்கிறது

கண்டிப் பகுதியைச் சேர்ந்த சிங்கள வர்த்தகர் ஒருவர் யாழ்ப்பாண மாவட்டத்துக்கு வந்து பனம் மட்டைகளைக் கொள்வனவு செய்து, அவற்றைக் கண்டிக்குக் கொண்டு சென்று, பனம் மட்டைகளைத் தும்புகளாக்கி, வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்ததன் மூலம் அவர் நூற்று நாற்பது லட்சம் ரூபா பெற்றுக்கொண்டார். இது மட்டுமல்ல வெளிநாட்டு ஏற்றுமதிக்கான ஊக்குவிப்பு உபகாரப் பணமாக பதினான்கு லட்சம் ரூபாவையும் அரசிடமிருந்து தட்டிக் கொண்டார்.

இந்த விபரத்தை வெளியிட்டவர்: யாழ். மாவட்ட அபிவிருத்தி சபை உறுப்பினரும், யாழ். மாவட்ட தெங்கு பனம்பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாஜத் தலைவருமான திரு. சு. நடேசு. இடம்:பண்டத்தரிப்பு கிராமோதய சபையின் விசேட பொதுக்கூட்டம்.

வடபகுதி தொழில் அதிபர்கள், வர்த்தகர்களுக்கு இது சமர்ப்பணம்!

★ ★ ★

நேற்று மாலை நான்கு மணிமுதல் இதனை எழுதிக்கொண்டிருக்கும்வரை 'ஆபீஸ்' தொலைபேசியில் பலமான செய்தி ஒன்று தொடர்ந்து அடிபட்டது.

''அப்படி ஒன்றும் நடக்கவில்லை'' என்று பதிலளித்தாலும் தொலைபேசியில் தொடர்புகொண்டவர்கள் விட்டபாடில்லை! கடைசியில், சம்பந்தப்பட்ட எம். பி.யுடனேயே தொடர்பு கொண்டேன்.

''கோணேஸ்வரத்தான் அப்படி ஒன்றும் கைவிடமாட்டான். சுகமாக இருக்கின்றேன்'' என்று சிரித்துக்கொண்டே பதிலளித்தார் அந்த எம். பி.

''ஊடுருவி'

## முகமூடி கொள்ளையர் கோண்டாவிலில் கைவரிசை

(யாழ்ப்பாணம்)

முகமூடி அணிந்த மூன்று கொள்ளைக்காரர்கள் துப்பாக்கி முனையில் வீட்டுக்குள் படுத்திருந்தவர்களை எழுப்பி பயமுறுத்தி வீட்டிலுள்ள மூன்று ஆண்களைகட்டிப்போட்டுஅங்கிருந்த பெண்ணிடமிருந்து நகைகளைக் கொள்ளை அடித்துச் சென்றுள்ளனர்.

கோண்டாவிலைச் சேர்ந்த கந்தையா திருவருட்சோதி என்பவரின் வீட்டிலேயே இக் கொள்ளைச் சம்பவம் நேற்று முன்தினம் நள்ளிரவு நடைபெற்றது.

முகமூடி அணிந்த மூவரில் ஒருவர் கைத்துப்பாக்கியும், மற்ற இருவரும் கிறிஸ் கத்தியும் வைத்திருந்தனராம். நள்ளிரவு வீட்டின் யன்னல் கம்பிகள் ஊடாக துப்பாக்கியை நீட்டிக்கொண்டு கதவைத் திறக்கும்படியும் பயமுறுத்தினராம்.

வீட்டுக்கதவு திறக்கப்பட்டதும் உள்சென்ற முகமூடித் திருடர்கள் அங்கிருந்த மூன்று ஆண்களையும் குளிர் அறைக்குள் கட்டிவைத்துவிட்டுபெண்ணிடமிருந்த 13,000 ரூபா பெறுமதியான நகைகளைக் கொள்ளை அடித்துச் சென்றுள்ளனராம்.

இக்கொள்ளையர்கள் செல்லும்பொழுது 'பொலிசாருக்கு முறையிடக்கூடாதுஎன்று எச்சரிக்கை செய்துவிட்டுச் சென்றதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இக்கொள்ளைச் சம்பவம் குறித்து வீட்டுக்காரர் சுன்னாகம் பொலிசில் புகார்செய்துள்ளார்.

சுன்னாகம் பொலிசார் தீவிர விசாரணையி லீடுபட்டுள்ளனர். இதுவரை எவரும் கைதுசெய்யப்படவில்லை. (மா)

## சுன்னாகம் மயிலணி கந்தசாமி கோவில் மகோற்சவம்

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் மயிலணிக் கந்தசுவாமி கோயில் மகோற்சவம் இம்மாதம் 4-ம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நாளை 15-ந் திகதி தீர்த்த திருவிழாவுடன் நிறைவு பெறும். தேர்த்திருவிழா இன்று வியாழக்கிழமை காலை 9மணிக்கு இடம்பெறும். இம்மகோற்சவ தினங்களில் தினமும் கந்தப்புராண சொற்பொழிவுகள் திரு. சண்முகவடிவேல், திருமதி திருச்சிற்றம்பலம் ஆகியோரினால் நடாத்தப்பட்டு வருகின்றது.

## மரண அறிவித்தல்

### நாகலிங்கம் சாந்தராசா

திரு. நாகலிங்கம் சாந்தராசா (இலங்கை வங்கி) கடந்த 7-7-83ல் காலமானார். அன்னார் பங்கஜதேவி (ஆசிரியை, தெல்லிப்பளை யூனியன் கல்லூரி) அன்புக் கணவரும், சசிதேவன், சுமங்கலி, குமாதேவன் ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 7-7-83ல் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்றது.

துர்க்கைஅம்மன் கோவிலடி கே. கே. எஸ். றோட் தெல்லிப்பளை (7969)

## மரண அறிவித்தல்

### A. S. ஜேம்ஸ்

இளவாலை புனித என்றியரசர் கல்லூரியின் இளைப்பாறிய தலைமை ஆசிரியர் A. S. ஜேம்ஸ் காலமாகிவிட்டார். இவர் காலஞ்சென்ற றெஜீனு அவர்களின் அன்புக் கணவரும் Dr. மனோகரன், மனோரஞ்சிதம், மனோகரி, மனோகரராஜா, சயந்தக்குமாரன், வசந்தி, ஆகியோரின் அன்புத் தந்தையும், ஜேசுரட்ணம், மரியதாஸ், காந்தி, சாந்தி ஆகியோரின் மாமனாரும் ஆன், ஜெனிபர், மரிலீன் ஆகியோரின் பேரனுமாவார். நல்லடக்கம் வெள்ளிக்கிழமை 15-ம் திகதி காலை 8 மணிக்கு இளவாலையில் நடைபெறும்.

''ஜமுனு காடின்''
இளவாலை

7967

## மரண அறிவித்தல்

### D. P. சீவரட்ணம்

உடுவில் கிழக்கு, D. P. சீவரட்ணம் [இளைப்பாறிய தலைமைஆசிரியர்] காலமாகிவிட்டார். இவர் தங்கம்மாவின்அன்புக்கணவரும்,முத்துமலர், நேசமலர்[ஆசிரியைகள், சுண்டிக்குளி மகளிர் கல்லூரி], பாஸ்ரர் அரியரட்ணம் (பூனு) ஆகியோரின் அன்புத் தந்தையும், அ. யோகரட்ணம் [ஆசிரியர்], இந்திராணி ஆகியோரின் அன்பு மாமனருமாவார். நல்லடக்க ஆராதனை அவரது இல்லத்தில் இன்று [14-7-83] பிற்பகல் 2-30 மணிக்கு நடைபெற்று, உடுவில் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். உறவினர்களும், நண்பர்களும் இத் தகவலை ஏற்றுக்கொள்ளவும்,

(7973)

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்க அச்சகத்தில் 1983—ம் ஆண்டு ஜூன் மாதம் 14-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka. under number B 100236/81. Eelanadu-P. O. Box: 49, Telegram: Eelanadu, Telephone: 22389— 24126.